மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 25 புதன்கிழமை (09.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 203




# ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டாலே விடுதலைப்புலிகளுடன் அமைதிப் பேச்சு

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயுதங்களைக் களைந்து ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டால் மட்டுமே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இனிவரும் காலங்களில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## பரந்தனில் குண்டு வீச்சு இளைஞர் படுகாயம்

(கிளிநொச்சி)

பரந்தன் பகுதியில் நேற்று விமானப் படையின் மிக்-27 ரக விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பரந்தன் பகுதியில் முற்பகல் 10.30 மணியளவில் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து விமானங்கள் குண்டுகளை வீசின. இக் குண்டுகள் மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் வயல் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இதில் செல்லத்துரை கமலநாதன் (வயது-25) என்பவர் படுகாயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

## அரசின் நிபந்தனை புலிகளால் நிராகரிப்பு

(கிளிநொச்சி)

இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கான எதிர்காலப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப்புலிகளுடனும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் இணைந்தே நடத்தப்படும் என அரசாங்கம் விடுத்துள்ள அறிவித்தலை தமிழீழ விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளனர்.

நோர்வே நாட்டின் பிரசன்னம் இல்லாமல் அரசாங்கத்துடன் மாத்திரம் பேச்சுவார்த்தையை நடத்த முடியாது என தமிழீழ விடுதலைப்புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் குறிப்பிட்டுள்ளார். *(மேலும் விரிவான செய்தி 08 ஆம் பக்கத்தில்)*

## வடக்கே தொடரும் யுத்தத்தினால் 2 ஆயிரத்து 500 பேர் இடம்பெயர்வு

(கொழும்பு)

மன்னார், வவுனியா முன்னரங்கப் பகுதிகளில் தொடரும் இராணுவ நடவடிக்கைகளின்போது மேற்கொள்ளப்படுகின்ற எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 600றக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்துள்ளதாகக் கிளிநொச்சியிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் பகுதியிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி, துணுக்காய் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் கிளிநொச்சி அக்கராயன் பகுதி *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## தேர்தல் ஆணையாளரைச் சந்திக்க ஐக்கிய தேசியக் கட்சி திட்டம்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்கள் சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணையாளரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களைச் சுதந்திரமானதும் நியாயமானதுமான வகையில் நடத்தப்பட வேண்டும் என்பது தொடர்பான கோரிக்கைகள் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பொலனறுவையில் 19 சட்ட விரோத ஆயுத முகாம்கள் காணப்படுகின்றமை, வாக்கு மோசடி, தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் உள்ளிட்ட *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## 31 குண்டு துளைக்காத வாகனங்கள் அரசால் எம்.பிக்களுக்கென இறக்குமதி

### அரசாங்கத்தின் பிரதம கொறடா தகவல்

(கொழும்பு)

13-வது நாடாளுமன்றத்தில் 31 குண்டு துளைக்காத வாகனங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக இதுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானுக்கு அரசாங்கம் குண்டு துளைக்காத வாகனத்தை வழங்கியுள்ளதுஎன நாடாளுமன்றம் கூடியபோது இந்த விவகாரம் குறித்துப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குண்டு துளைக்காத வாகனத்தை அரசாங்கம் பிள்ளையானுக்கு வழங்கியிருப்பதாக நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார்.

இக் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையில் அரசாங்கத்தின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளதாவது,

குண்டு துளைக்காத வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பது உண்மையே என்றும் எனினும் அவற் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## அவசர காலச் சட்டம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை 94 மேலதிக வாக்குகளால் நேற்று மாலை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இதற்கான பிரேரணையைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

பிரேரணைக்கு ஆதரவாக 111 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அரசாங்கத் தரப்புக் கட்சிகள் அனைத்தும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.ஐ.தே.க. இந்த வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (ச-5)

## கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 112 படையினர் உயிரிழப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கடந்த ஒரு மாதத்தில் இடம்பெற்ற மோதல்களில் 112 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 793 படையினர் படுகாயமடைந்துள்ளனர் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடிய தும் அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் இறுதி கட்டத்தை அடையும் வேளையில் படையினரின் நடவடிக்கைகளைக் குழப்புவதற்கு எவரும் முனைய வேண்டாம். அரசியலில் கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் இருப்பினும் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் முயற்சியில் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## கடத்தல்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் நாளாந்தம் கடத்தல்கள் இடம்பெறுகின்றன. ஊடகங்கள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது. இதனால் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு நற்பெயர் இல்லாமல் போயுள்ளது.

இந் நிலையை மாற்றியமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

# அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும்
# ஒரு வருடமாவது மக்களுக்கு சேவை ஆற்றவேண்டும்

## கைத்தொழில் அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண

(கொழும்பு)

அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் குறைந்த பட்சம் ஒரு வருடமாவது மக்களுக்கு இலகு சேவையை வழங்க வேண்டும் என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண தெரிவிக்கின்றார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகம் என குற்றம் சாட்டுகின்ற போதிலும் தற்கால அரசியல் நடைமுறைக்கமைவாக சகலரும் அமைச்சு பதவிகளையே எதிர்பார்ப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமையை கருத்திற்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காகவும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும் சகல அரசியல் தலைவர்களையும் ஒன்றிணைக்கும் செயற்திட்டம் ஒன்றை அரசாங்கம் நடைமுறைப் படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கம்பளை அம்புலாவாவியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக விசேட செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்த படவுள்ளதாகவும் அமைச்சர் டி.எம். ஜெயரட்ண குறிப்பிட்டார்.

அடுத்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ள இந்த செயற்றிட்டத்திற்காக 250 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக அரசாங்கம் மட்டுமல்லாது தனியார் துறையினரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.(அ)

# அவசரகால கடன் உதவியில் கல்வித்துறைக்கு ரூ.780மில்லியன்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான அவசர காலக் கடனுதவியில் 780 மில்லியன் ரூபா கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த நிதியை உடனடியாக ஒதுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி நிர்வாக அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு பதவி உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

போட்டிப்பரீட்சைகள் மற்றும் பரீட்சைகள் மூலம் இந்த பதவி உயர்வுகளை வழங்குமாறு ஜனாதிபதி இதன் பொழுது கூறியுள்ளார்.

தற்காலிக சேவையில் உள்ள அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாகவும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் அரச வங்கிகளில் இருந்து கடன் பெற்றுக்கொள்ளும் பொழுது வழங்கப்படும் விசேட வட்டி வீதத்தை தொடர்ந் தும் செயற்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த சந்திப்பில் ஆலோசனை வழங்கியுள்ளார். (அ)

# தொடரும் மோதல்களினால் இதுவரை 3 இலட்சத்து 38ஆயிரம் பேர் பலி

## வோஷிங்டன் பல்கலைக்கழகம் ஆய்வு

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்து மோதல் களில் கடந்த 2002ஆம் ஆண்டு வரை 2 இலட்சத்து 15ஆயிரம் பேர் கொல்லப் பட்டிருப்பதாக வோஷிங் டன் பல்கலைக் கழகம் மற்றும் ஹவார்ட் மருத்துவக் கல்லூரி ஆகியன நடத்திய ஆய்வில் கண்ட றிப் பட்டுள்ளது.

எனினும் தொடர் மோதல்களில் 3 இலட்சத்து 38 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டி ருக்கலாமென அந்த ஆய்வில் தெரி விக்கப்பட்டுள்ளதுடன் மோதல்க ளால் நேரடியாகக் கொல்லப்பட்டவர்கள் குறித்து உத்தியோகபூர்வ மாகப் பதிவு செய்யப்பட்ட எண்ணிக் கையே 2 இலட்சத்து 15ஆயிரம் எனவும் கூறப்பட் டுள்ளது.

பல்வேறு தரப்பினரால் மேலும் பலர் கொல் லப்பட்டிருக்கலாமென அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் 1983ஆம் ஆண்டு முதல் இலங்கையில் இடம்பெற்று வரும் மோதல் களில் 70ஆயிரம் பேர் மத்திரமே கொல லப்பட்டிருப்பதாக தமிழகத்தின் மாலை நேர ஆங்கிலப் பத்திரிகையான நியூஸ் டுடே செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தகவலானது ஆய்வின் தகவலுடன் முரண்படும் வகையில் அமைந்துள்ளது.

மோதல்களிலிருந்து தப்பியவர் களிடம் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லையென்பதை இந்த ஆய்வு தெளிவாகக் காட்டுவதுடன் பக்கச்சார்பான முறையில் எண்ணிக்கைகள் திரட்டப்பட்டிருக்கலாம் எனவும் நியூஸ் டுடே தெரி வித்துள்ளது.

இதேவேளை கடந்த ஒரு மாத காலப் பகுதியில் 112 பாதுகாப்புத் தரப்பினர் கொல் லப்பட்டிருப்பதுடன் 43 பொதுமக்கள் உயிரிழந்திருப்ப தாகவும் பிரதமர் ரட்ணசிறி விக்ரம நாயக்க நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணையை முன்வைத்து உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு கூறியிருந்தார். இந்த ஒரு மாத காலப்பகுதியில் 793 பாது காப்புப் படையினரும் 61 பொதுமக்களும் காயமடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார். (அ)




### நல்லூர் கந்தசாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2008

நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 22.07.2008 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஐஸ்கிறீம் கடைகளுக்கு மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10000/=ம் ஏனைய கடைகளுக்கு ரூபா 2000ம். மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணமாக ரூபா 300/=ம்(வற் வரி நீங்கலாக) செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று விண்ணப்பபடிவத்தினை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் 22.07.2008ஆம் திகதி காலை 10.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் யாவையும் இவ் அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியில் 22.07.2008 ஆம் திகதி 12.00 முன்னர் சேர்க்கப்பட வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் எதிர்வரும் 22.07.2008ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு ஆணையாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். சித்தி பெற்றவர் கேள்வித் தொகையை முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வரை படத்தையும் பார்வையிடலாம்.

குறிப்பு :- i) கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தர கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகரசபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள், தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடாத்தவும் விளம்பரங்கள், விளம்பரபதாதைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

ii) கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தர கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
07.07.2008

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

C-1297


# க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் இரு கட்டங்களாக நடைபெறும்

## பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு

க.பொ.த.உயர்தரப் பரீட்சைகள் இரண்டு கட்டங்களாக நடத்தப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத்தேர்தல்கள் அடுத்த மாதம் நடைபெறவிருப்பதனால் மாணவர்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும் முகமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

திட்டமிட்டபடி அடுத்த மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகும் க.பொ.த.உயர்தரப் பரீட்சைகள் ஆகஸ்ட் 21ஆம் திகதி வரை முதற்கட்டமாகவும் 25ஆம் திகதி முதல் செப்டம்பர் 3ஆம் திகதி வரை இரண்டாம் கட்டமாகவும் நடைபெறவுள்ளன. ஆகஸ்ட் 22, 23 மற்றும் 24 ஆகிய தினங்களில் பரீட்சைகள் நடத்தப்படமாட்டாது.

இம்முறை பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என 2 இலட்சத்து 42 ஆயிரம் மாணவர்கள் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)


### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

### மரணசாதன அதிகாரப்பத்திர அலுவலரால் வெளியிடப்படும் அறிவித்தல்

வழ.இல. 03/2008
தத்துவம்.

காலஞ்சென்ற வல்லிபுரம் செல்வநாதனின் மரணச்சொத்து தொடர்பாக,
குடியியல் நடைமுறைச்சட்டக்கோவையின் 528 ஆம்
பிரிவின் கீழான விண்ணப்பம்.
வல்லிபுரம் செல்வநாதன் கைம்பெண் - ரோகினி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

- மனுதார்

எதிராக

1. செல்வநாதன் மகன் துவாரகன்,
2. செல்வநாதன் மகள் டிலக்ஷனா இருவரும்
   மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
   (பாராயமற்ற 1ஆம், 2ஆம் எதிர்மனுதாரரின் வழக்குப்பாதுகாவலர்.
3. தியாகராசா வெற்றிவேலு,
   மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

- எதிர்மனுதாரர்கள்

காலஞ்சென்ற வல்லிபுரம் செல்வநாதனின் மரணச் சொத்து தொடர்பாக மரணசாதன நிர்வாகத் தத்துவப்பத்திரம் பெறுவதற்காக இம்மன்றில் மனுதாரரால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கப்டுகின்றது.

மேற்படி மரணச் சொத்து தொடர்பாக மர்ணசாதன நிர்வாகத் தத்துவப்பத்திரமொன்றை மேலே குறிப்பிட்ட மனுதாரருக்கு வழங்குமாறு கட்டளையொன்றை வழங்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆளொருவரும் 2008ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் அத்தகைய ஆட்சேபனையை (சத்தியக்கடதாசியின் ஆதாரத்துடன்) இம்மன்றில் கோப்பிடுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

வரைபு
மனுதாரரின் சட்டத்தரணி.

மரணசாதன அதிகாரப்பத்திர அலுவலர்,
மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி.

பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி. 1440

# இன்று ஒரு தகவல்

## நம்பிக்கை

ஒரு தடவை நாரதர் தெருவழியாக போய்க்கொண்டிருந்தார். வழியில் வேத சாஸ்திரம் படித்த ஒருவர் நாரதரைப் பார்த்து "எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"கடவுளைப் பார்த்துவிட்டு வரலாம் என்று போய்க் கொண்டிருக்கிறேன்." என்றார் நாரதர்.

"அப்படியானால் அவரிடம், எனக்கு எப்பொழுது முத்தி கிடைக்கும் என்று கேட்டுக்கொண்டு வாருங்கள்!" என்றார் இவர். சரி என்று சொல்லிவிட்டு நாரதர் நடந்தார். கொஞ்ச தூரத்தில் ஒரு மரத்தடியில் ஒரு தொழிலாளி செருப்பு தைத்துக் கொண்டிருந்தான். அவனும் அதே மாதிரியே நாரதரிடம் "எனக்கு எப்பொழுது முத்தி கிடைக்கும் என்று கேட்டுக் கொண்டு வாருங்கள்!" என்றான்.

அவனிடமும் சரியென்று சொல்லிவிட்டு நாரதர் நேராக வைகுண்டத்துக்கு வந்து சேர்ந்தார். கடவுளைப் பார்த்தார். இவர்கள் இரண்டுபேரும் சொல்லி அனுப்பிய விஷயத்தைப் பற்றிக் கேட்டார். அதற்கு கடவுள், "அந்த செருப்பு தைக்கும் தொழிலாளி உடல் நீத்ததும் உடனே என்னை வந்தடைவான். ஆனால் அந்த சாஸ்திரம் படித்தவன் இப்போதைக்கு என்னிடம் வந்து சேரமாட்டான். அவன் இன்னும் பல பிறவிகள் எடுத்து அங்கேயே இருக்க வேண்டியிருக்கிறது. எப்பொழுது இங்கே வந்து சேருவான் என்று எனக்கே தெரியாது!" என்றார்.

நாரதனுக்கு இதன் ரகசியம் என்னவென்று புரியவில்லை. "எனக்கு ஒன்றும் புரியுவில்லை!" என்றார் கடவுளிடம்!

சீக்கிரம் புரிந்துகொள்வாய்! நீ திரும்பிப் போகும்பொழுது நான் இங்கே வைகுண்டத்தில் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்று கேட்டால்... ஒரு ஊசியின் துவாரத்தில் ஒரு யானையை கோர்த்துக் கொண்டிருக்கிறேன் என்று அவர்களிடம் சொல்! என்றார் கடவுள் சிரித்துக்கொண்டே!

நாரதர் பூமிக்குத் திரும்பினார். "கடவுளைப் பார்த்தீர் களா? எப்படி இருக்கிறார்?" என்று விசாரித்தார் வேத சாஸ்திரம் படித்தவர். "ஓ... பகவானா... அவர் யானையை ஊசித் துவாரத்தில் நுழைத்துக்கொண்டிருந்தார்" என்றார் நாரதர்.

"ஊசி காதில் யானையா? அது எப்படி முடியும்? நீங் கள் சொல்வதை நம்பமாட்டேன்!" என்று சொல்லிவிட்டார்கள்.

"சரி... இந்த ஆளுக்கு இறைவன்மீது நம்பிக்கை இல்லை!" என்பதை நாரதர் புரிந்துகொண்டார். அடுத்தபடியாக அந்தத் தொழிலாளி இருந்த இடத்துக்குப் போனார்.

"இறைவனைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார் அவர். "பார்த்தேன்... ஒரு ஊசித் துவாரத்தில் யானையை கோர்த்துக் கொண்டிருக்கிறார்!" என்று சொல்லிவிட்டு நாரதர் அந்த ஆள் முகத்தை கவனித்தார். அந்தத் தொழிலாளி இதைக் கேட்டு கொஞ்சம்கூட ஆச்சரியப்படவில்லை! "அவரால் முடியாத காரியம் கூட உண்டா?" என்றார்.

"என்ன இப்படி சொல்கிறாய்? ஊசியின் துவாரத்தில் யானையைக் கோர்க்க முடியும் என்று நீ நம்புகிறாயா?" என்று கேட்டார் நாரதர்.

"நிச்சயமாக நம்புகிறேன். நான் இந்த ஆலமரத்தடியில் தான் தினமும் உட்கார்ந்திருக்கிறேன். தினமும் இந்த மரத்தில் இருந்து விழும் பழத்தில் இருக்கிற ஒவ்வொரு விதையிலும் ஒரு ஆலமரம் இருக்கிறது!

ஒரு சின்ன விதைக்குள் ஒரு பெரிய ஆலமரம் இருக்க முடியும் எனும்போது ஊசி துவாரத்தில் கடவுள், யானையை நுழைய வைத்தார் என்பதை ஒத்துக்கொள்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது?" என்று சர்வ சாதாரணமாக சொன்னார் அந்தத் தொழிலாளி.

நாரதர் யோசித்தார்.

இந்தத் தொழிலாளி வேத சாஸ்திரங்களை படிக்காவிட்டாலும் 'அறிவுபூர்வமாக சிந்தித்து நம்புகிறான்...' அதனால் தான் கடவுள் இவனுக்கு சீக்கிரம் முத்தி கிடைக்கும் என்று சொன்னார் என்பதைப் புரிந்துகொண்டார்.

ஒரு சின்ன விதைக்குள் ஒரு பெரிய ஆலமரம் தூங்கிக் கொண்டிருப்பது உண்மை. அந்தரத்தில் ஆயிரம் கிரகங்கள் சுற்றிக் கொண்டிருக்கிறது உண்மை. இந்த உண்மைகள் அதிசயமாக நமக்குத் தெரிவதனால் அதை நம்பாமல் இருக்க முடியாது. இயற்கையை பரிபூரணமாக நம்புங்கள்–அந்த நம்பிக்கையே நமது வாழ்வுக்கு ஆதாரம் என்பதை விளக்கத் தான் இந்தக் கதை.

ஒருநாள் சின்னப்பையனிடம், "ஏனப்பா... கடவுள் ஒரு பானைக்குள் ஒரு யானையை நுழைய வைத்துவிட்டார் என்றால் அதை நம்புவாயா? என்று கேட்டேன்.

"நம்புவேன் சார்... அது ஒன்றும் பெரிய அதிசய மில்லை!" என்றான்.

"எப்படி?" என்று கேட்டேன்.

"அந்தப்பானை அந்த யானையைவிட பெரிதாக இருந்திருக்கும்... அவ்வளவுதான்!" என்றான் அவன்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# சூழலைப் பாதுகாக்கவும், மாற்று வளங்களைத் தேடவும் இலங்கை தயாராக வேண்டும்

## லாப் குழுமத்தின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சூழல், எண்ணெய்மற்றும்உணவு ஆகிய துறைகளில் எதிர்நோக்கப் படும் உலகளாவிய நெருக்கடிகளை விரைவாக எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை இலங்கை மேற் கொள்ள வேண்டும் என லாப் குழுமத்தின் தலைவர் டபிள்யு.கே. எச்.வெகாபிட்டிய தெரிவித்துள்ளார்.

"பூகோள வெப்பமடைதல் இன்று உலகம் எதிர்நோக்கும் முதலாவது அச்சுறுத்தலாகும் இரண்டாவது அச்சுறுத்தல் எரிபொருளில் தங்கியிருப்பதும் அதனால் ஏற் பட்டிருக்கும் விலையுயர்வுமாகும். மூன்றாவது எண்ணெய் பிரச்சினையினால் ஏற்பட்டிருக்கும் உணவுப் பிரச்சினையாகும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பூகோள வெப்பமடைதல் தொடர் பான பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகளில் கைச் சாத்திட்டுள்ளபோதிலும் அதனைக் கடைப்பிடிப்பதில் மிகக்குறைந்த அடைவுகளையேவெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பூகோள வெப்பமடைதலால் ஏற்கனவே ஓசோன்படை பாதிக் கப்பட்டுவிட்டதாகக் குறிப்பிட்டுள்ள அவர், இதன்பின்னரும் நாம் மௌனமாக இருக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

சூழலைப் பாதுகாப்பதற்கான சட்டங்களை அமுல்படுத்தவும், மாற்று சக்திவளங்களை அறிமுகப் படுத்தவும் இலங்கை தயாராவதற்கான நேரம் வந்துவிட்டது எனக் குறிப்பிட் டுள்ள வெகாபிட்டிய இதன் மூலம் சூழல்மாசடைவதைக்குறைக்க முடிவதோடு இயற்கை வாயுவை போக்குவரத்திற்கு உபயோகிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எண்ணெய் நெருக்கடி குறித்து கருத்துத் தெரிவித்திருக்கும் வெகா பிட்டிய எண்ணெக்கான வரு டாந்த கேள்வி 3–4 வீதத்தினால் அதிகரித் துள்ளதாகவும் ஆனால் வருடாந்த எண்ணெய் விநியோகமானது 4–5 வீதத்தினால் குறைவடைந்துள்ள தாகவும் இதுவே எண்ணெய் நெருக் கடிக்கான பிரதான காரணம் என வும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## ஹென்ஸ்மன் வீதி திருத்தம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஹென்ஸ்மன் வீதி சீமெந்து கொங்கிறீற் வீதியாக மாற்றும் பணி நடைபெறுவதால் நீதி மன்றிற்கு வருவோர் டச்சு வீதியின் பகுதியைப் பாவிக்கும்படி தெரி விக்கப்படுகிறது. (அ-29)

# விஞ்ஞான வினாடி வினாப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தில் விஞ்ஞான வினா விடைத் தேர்வுப் போட்டியில் தெரிவானோர் பெயர் விபரங்கள் தரப்படுகின்றன.

இம் மாணவர்கள் இறுதிப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வழிப்படுத்தல் மேற்கொள்ளப்படவேண்டியவர்கள் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### தரம்- 6

சி.மருரிகன்– உசன் இராமநாதன் ம.வி., பே.தர்சன்–சாவகச்சேரி இந்து கல்லூரி, சி.கார்த்திகா–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, ம.நிமல்–மிருசுவில் அ.த.க.பாடசாலை, ம.சுயந்தன்–வைதடி குருசர்மி வித்தி., கு.கேதாரன்–மீசாலை வீரசிங்க ம.வி., சி.துர்க்கா–உசன் இராமநாதன் ம.வி., ஸ்ரீ.சிவஜா– சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மு.மதுராந்ததி–சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

### தரம்- 7

அ.கிரிஷாந்–சாவகச்சேரி இந்து கல்லூரி, உ.தாட்சாயினி–சாவகச்சேரி இந்துகல்லூரி, சி.கஜானன்–மீசாலை வீரசிங்க ம.வி., சி.வின்சன்–கைதடி நாவற்குழி அ.த.க., க.விமோசன்– சாவகச்சேரி இந்துக் கல்லூரி, லக்ஷிகா–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சு.விஜிதன்–மீசாலை வீரசிங்கம் ம.வி., தே.வித்தியா–கச்சாய் அ.த.க.பாட., சு.நிருபா–கொடி.திருநாவுக்கரசு ம.வி., ற.சுஜிலன்–கைதடி முத்துக் குமாரசாமி–ம.வி., இ.சங்கமி–உசன் இராமநாதன் ம.வி., மு.மயூரன்–சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

### தரம் - 9

த.சிவதாஸ்–கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., பே.கோகிலா–மந்துவில் றோ.க.த.க.பாட., நா.ஜனுசன்–கொடி.திருநாவுக்கரசு ம.வி., அ.கீர்த்திகா–மீசாலை வீரசிங்கம் ம.வி., கி.கிறிஸ்ரிகா–உசன் இராமநாதன் ம.வி., கு.ஜனுவிந்–கொடி. திருநாவுக்கரசு ம.வி., மு.சிந்துஜா–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சா.துஷாந்தினி–உசன் இராமநாதன் ம.வி., தெ.வைஷ்ணவன்–மீசாலை வீரசிங்கம் ம.வி., க.நிரோஜினி–நாவற்குழி ம.வி., ச.அகிம்சா–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, வ.கோபிகா–வரணி ம.வி.

### தரம் - 10

பொ.தனுசாந்– மீசாலை வீரசிங்கம் ம.வி., ப.பத்மலோஜனி–மீசாலை வீரசிங்கம் ம.வி., க.அபிராமி–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, அ.கிரிஷாந்–மீசாலை வீரசிங்கம் ம.வி., செ.லக்ஸ்மிஜா–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சி.சங்கீதா–நாவற்குழி ம.வி., வ.காவேரி–கச்சாய் அ.த.க.பாடசாலை, கி.கனிஸ்ஸா–உசன் இராமநாதன்ம.வி., சி.தேனுகா–சாவகச்சேரி மகளிர் கல்லூரி, ர.வவீசன்–கைதடி நாவற்குழி அ.த.க. பாட.

### தரம் - 11

செ.ஜிந்துஜன்–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சூ.தர்மிகா–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பா.நிலாயினி–மீசாலை வீரசிங்கம் ம.வி., சி.நிஷாந்தி–சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இ.உமைப்பிரியை–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, க.சஞ்சீவன்–மீசாலை வீரசிங்கம் ம.வி., சி.அகிலாண்டேஸ்வரி–கொடி.திருநாவுக்கரசு ம.வி., ச.குகப்பிரியா–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சு.பகீரதன்–மீசாலை வீரசிங்கம் ம.வி., அ.சுவர்ணா–நாவற்குழி ம.வி., கு.கோபிகா–கொடி.திருநாவுக்கரசு ம.வி.

### தரம் 8


சி.ரூபகானன் - மீசாலை வீரசிங்கம் ம.வி., சி.சுஜிபன்–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, உ.உமாசுதன்–சாவ.இந்துக்கல்லூரி, ப.தேமதுரன்–மீசாலை வீரசிங்கம் ம.வி., த.செந்தாளன்–சாவ. இந்துக்கல்லூரி, இ.கீர்த்தனா–இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி., க.நிறஞ்சன்–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, நி.பாஸ்கரி - கைதடி நாவற்குழி அ.த.க.பாட. (இ)

# இராசிபலன்

09.07.2008
(ஆனி 25, புதன்கிழமை)
உத்தரம் முற்பகல் 11.08 மணிவரை
ஸப்தமி பின்னிரவு 1.41 மணிவரை
இராகுகாலம் 11.58–01.28மணிவரை
சுபநேரம்–04.28–5.58 மணிவரை
உதயம் நடேசர் ஆனி உத்தர தரிசனம்

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம். |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய நன்மை, கூட்டுமுயற்சி. |
| மிதுனம் | மனோசங்கடம், அதிகசெலவு, ரோகநிலை, திடீர்நன்மை. |
| கடகம் | மாதர்நட்பு, வெகுமானம், நல்ல முயற்சி, தெய்வசிந்தை. |
| சிங்கம் | உஷ்ணநிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், தனதானிய சேர்க்கை, ஆனந்தம். |
| துலாம் | ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி. |
| விருச்சிகம் | நிலைமாற்றம், புத்திரரால் கவலை, பிரயாணம், பண்விரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரிய தடங்கல், தர்மம், போசனசுகம். |
| மகரம் | நல்லமுயற்சி, தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | காரிய அனுகூலம், கீர்த்தி, போசனசுகம், உற்சாகம். |
| மீனம் | தாழ்ந்த நிலை, முயற்சி தாமதம், தனவிரயம், போசனசுகம். |

வள்வன்



தட்டாதெரு மெ.மி.த.க.பர்டசாலையின் பரிசளிப்புவிழாவில் பாடசாலை அதிபர் திருமதி சத்தியபாமா நவரத்தினம் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவபீட பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், வண பிதா பேனாட் ரெக்னோ, பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் இ.இராகவன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி வாரம் 2008 இல் சுற்றாடல் தினமான யூலை 11 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை தலைமை அலுவலகக் கேட்போர் கூடத்தில் சுற்றாடல் விழிப்புணர்வுக் கருத்தரங்கினை நடாத்தவுள்ளது.

நிகழ்வில் ''பூகோளம் வெப்பமயமாதலும் அதன் எதிர்கால விளைவுகளும்'' எனும் பொருளில் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் அ.உதயகுமார் கருத்துரை வழங்கவுள்ளார்.

அனைவரையும் கருத்தரங்கில் பங்குபற்றி பயன்பெறுமாறு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை செயலாளர் கேட்டுள்ளார். (ஓ)

## நாடகக் கருத்தரங்கு

நல்லூர் பிரதேச கலாசார பேரவையும் செயல்திறன் அரங்க இயக்கமும் இணைந்து நடாத்தும் நாடகக் கருத்தரங்கு தொடர்-I 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் 12.30 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தொடக்கவுரையை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் வழங்குவார். செயல்திறன் அரங்க இயக்குனர் தே.தேவானந்த ''யாழ்ப்பாணத்தில் அரங்கு-பிரச்சினைகளும் முன்மொழிவுகளும்'' எனும் பொருளில் கருத்துரை வழங்குவார். (ஓ)

## கணிதபாட மாதிரி பயிற்சிப் பரீட்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பாடசாலைகளில் க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான கணித பாட மாதிரிப் பயிற்சிப் பரீட்சை 1 எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும் அதற்கான வினாத்தாள் பொதிகளை 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.12.30 இற்குப் பின் வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேம காந்தன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## கணித, விஞ்ஞான விநாடி வினாப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்விவலய பாடசாலைகளில் தரம் 6-11 வகுப்புகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான தமிழ் மொழிமூலமான கணித, விஞ்ஞான விநாடி வினாப் போட்டியும் ஆங்கில மொழிமூலமான கணித விஞ்ஞான விநாடி வினாப் போட்டியும் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக் கிழமை மு.ப.8 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறுமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேம காந்தன் தெரிவித்துள்ளார். (ஓ-29)

## மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கிராம்புவில் படையாண்டாள் கோட்ட கந்தசாமி கோயிலின் 2008ஆம் ஆண்டுக்கான மஹோற்சவ பெருவிழா நாளை கலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று 20ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திருக்கல்யாணம் பூங்காவன வைபவத்துடன் நிறைவேறும்.

அதேதினம் கன்னிப் பெண்களும் சுமங்கலிப் பெண்களும் கலந்துகொள்ளும் தீப பூசையும் இடம்பெறும் என்றும் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (ஓ-29)

***

சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞான வைரவர் கோவில் வருடாந்த மஹோற்சவம் 7ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. 16ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 17ஆம் திகதி வியாழக் கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெற்று, 19ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் வருடாந்த பொங்கல் உற்சவமும் இடம்பெறும்.

தினமும் பகல் 10 மணிக்கு காலை அபிஷேகப் பூசையும் மாலை 4 மணியளவில் பின்நேரப் பூசையும், 5.30 மணியவில் சுவாமி வீதியுலா வரும் வைபவமும் இடம் பெறுகின்றது. (ஓ)



சுன்னாகம் தபாலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான காணி கொள்வனவு செய்வதற்காக அவ்வூர் வாழ் மக்கள் சுன்னாகம் நகர அபிவிருத்தி மன்றத்தின் மூலம் எடுக்கப்படும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கியின் 5ஆம் அகவை பூர்த்தியை முன்னிட்டு ரூபா 25ஆயிரத்துக்கான காசோலையை வங்கியின் பிரதி பொது முகாமையாளர் (வலயம் I) திருமதி கிரு ஷாந்தி தம்பையா சுன்னாகம் நகர அபிவிருத்தி மன்றப் பிரதிநிதிகளிடம் அன்பளிப்பாக வழங்குவதையும் இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் வடகிழக்கு பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் ஏ.வி.பீடில், யாழ்.மேற்தரக்கிளை சிரேஷ்ட முகாமையாளர் சி.ஜெயராஜசிங்கம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையினால் நடாத்தப்படும் போட்டிகள்

உள்ளூராட்சி வாரத்தினை சிறப்பிக்கும் முகமாக நல்லூர் பிரதேசசபை பின்வரும் போட்டிகளை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

* எமது சபை எல்லைக்குட்பட்ட ஊனமுற்றோர்களுக்கு இடையேயான முச்சக்கர சைக்கிள் ஓட்டப்போட்டி.
* எமது சபை எல்லைக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி (06 பேர் 06 பந்துப் பரிமாற்றம்)

போட்டிகளுக்கான விண்ணப்ப படிவங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் 18 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்புமாறும் நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## வெளிமருந்தாளர் பரீட்சை தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

12.07.2008 அன்று நடைபெறவிருக்கும் வெளிமருந்தாளர் பரீட்சைக்கு விண்ணப் பித்திருந்த யாழ்ப்பாண மாவட்டப் பரீட்சார்த்திகளை மேற்படி பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவது சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக யாழ்ப்பாணக் கச்சேரியில் உள்ள சமூக சேவைகள் சமூக நலத் துறை அமைச்சின் பிராந்திய அலுவலகத் தில் இன்று காலை 9 மணிக்கு மாவட்ட இணைப் பாளரைச் சந்திக்குமாறு மாவட்ட இணைப் பாளர் தெய்வேந்திரா தெரிவித்துள்ளார். (அ)

## பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டி

40 ஆவது சர்வதேச பௌதிகவியல், 10 ஆவது ஆசிய பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டிகளுக்கான தெரிவுப்பரீட்சை ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணிவரை யாழ்.பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க.பொ.த.உயர்தர வகுப்பில் பௌதிகத்தை ஒரு பாடமாகக் கொண்ட மாணவர்களுக்கான இப்பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்கள் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10 மணிக்கு முன்னர் 222 2259 என்ற தொலைபேசி இலக்கத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டு அறிவித்துவிட்டு சனிக்கிழமை பரீட்சைக்குத் தோற்றுமாறு பரீட்சை இணைப்பாளர் கலாநிதி சிவயோகன் தெரிவித்துள்ளார். (ஓ)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றுவதற்கு வக்சின் (vacine)மருந்து கொழும்பில் இருந்து வராத காரணத்தால் திட்டமிட்டபடி 09/07/2008 இருந்து 19.8.2008 வரை நடைபெறமாட்டாது எனவும் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் தெரிவித்துள்ளார். (அ)




## பெண் நாய்களுக்கான கருத்தடை சத்திரசிகிச்சை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வைத்திய பணிமனையில் பெண் நாய்களுக்கான கருத்தடை சத்திரசிகிச்சையும் கருத்தடைக்கான ஊசியும் வார நாட்களில் காலை 8.30 தொடக்கம் 12 மணிவரை மேற்கொள்ளப்படும் என்றும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளவுள்ள நாங்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும்,

ஏற்றப் படாவிட்டால் பணி மனையில் இலவசமாக ஏற்றலாம் என்றும் ஏற்றி இரண்டு வாரங் களின் பின் சத்திர சிகிச்சையை மேற்கொள்ளலாம் என்றும் இதற்கான பதிவுகளை மேற் கொண்டு பொது மக்களை ஒத்துழைக்கும் படியும் பணிமனைப் பொறுப்பதிகாரி இரகுநாதன் கேட்டுக்கொள்கிறார். (ஓ)

## புதிய கட்டட திறப்புவிழா

புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் பொன்விழாவும் பரிசளிப்பு விழாவும், புதிய கட்டடத் திறப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வித்திணைக்கள பாடசாலை வேலைப்பகுதி பொறியியலாளர் கு.சிவபாலன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்விப் பீடம் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெ.இராஜநாயகம், கௌரவ விருந்தினர்களாக அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் த.புவனேந்திரன், அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் இ.யோகராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பொன்விழாப் பேருரையை ஓய்வு பெற்ற அதிபரும் பழைய மாணவருமான நா.சிவஞானம் நிகழ்த்தவுள்ளார். அச்சுவேலி காட்டுமலை கந்தன் ஆலய பூசகர் சிவ.பாலசுப்பிரமணியம் ஐயா ஆசியுரையை வழங்குவார். (ஓ)

## இலங்கைச் சாரணர் சங்கம் விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண இலங்கைச் சாரணர் சங்கத்தின், மாவட்ட சாரண ஆணையாளர் உதவி மாவட்ட சாரண ஆணையாளர்கள் நிர்வாகம், பயிற்சி பொதுசனத் தொடர்பு ஆகியோருக்கான விசேட கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மாகாண மட்ட சாரணர் பெருவிளையாட்டு விழா, பொது விளையாட்டு கால் இறுதி அரை இறுதி, இறுதியாட்டங்கள், மலர் வெளியீடு மேலும் பல விடயங்கள் பற்றிய தீர்மானங்கள் எடுக்க வேண்டியுள்ளதால் சகலரையும் தவறாது சமூகமளிக்குமாறு வடமாகாண சாரண ஆணையாளர் கேட்டுக் கொள்கின்றார். (அ)

## சத்துணவு தயாரிக்கும் பயிற்சி வகுப்புகள்

(சாவகச்சேரி)

தரம் 11இல் பயிலும் தென்மராட்சிப் பகுதி மாணவர்களுக்கு இலைவகை சேர்த்து சத்துணவு தயாரிப்பதற்கான பயிற்சி வகுப்புகள் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் பாடசாலைகள் தோறும் செய்முறைப்பயிற்சியுடன் நடாத்தப்படுகின்றது. (ஓ-29)



இலங்கை வங்கி, சுன்னாகம் மேற்தரக்கிளை, உரும்பிராய் வடக்கு கிராமத்தை பொருளாதார சுபீட்சமிக்க கிராமமாக மாற்றுவதற்கு தெரிவு செய்து அங்குரார்ப்பண விழாவில் சுன்னாகக்கிளை முகாமையாளர் எஸ்.பி அரசகுமார் மங்கல விளக்கேற்றுகிறார். அருகில் செயற்பாட்டு முகாமையாளர் என் சிவரட்ணம், உதவிபொதுமுகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம், அச்சுவேலி முகாமையாளர் ரி.புவனேந்திரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# நோத்முதல் கோயல்லவா வரை 31



### ஆங்கிலேயர் கண்டியைப் பிடித்தமை

இந்த வேளையில் மாத்தறை வாசிகளான பத்து வியாபாரிகள் கண்டியில் வேவுகாரர் எனச் சந்தேகத்தின் நிமித்தம் மன்னன் முன் நிறுத்தப்பட்டார்கள். கரைநாட்டு வியாபாரிகளை வெளியேறுமாறு முன்னமே கட்டளை விதித்திருந்த மன்னனுக்கு அவர்களைக் கண்டதும் கோபாவேசம் உண்டானது. அவன் தண்டக்காரரை ஏவி வியாபாரிகளின் மூக்கு, காதுகளை அறுத்து மாலையாக அவர்கள் கழுத்தில் இட்டு அனுப்புமாறு உத்தரவிட்டான். அதனால் வியாபாரிகளுள் எழுவர் வழியில் இறந்துபோக மூவர் உயிர் தப்பி மீண்டு கொழும்புக்குச் சென்று ஆள்பதி பிறவுண்றிக் அவர்களிடம் முறையிட்டு அழுதார்கள். இவ்வினையும் எகிலப் பொலவின் சூழ்ச்சியால் நடைபெற்றது என்றும் அவன் ஆங்கிலேயரை ஆத்திரமூட்டிக் கண்டி மீது படையெடுக்கச் செய்யவே அங்ஙனம் செய்வித்தான் என்றும் சிலர் கருதுவர்.

நெப்போலிய யுத்தங் காரணமாக ஆங்கிலேயர் தமது முழுப் படைப் பிரயோகத்தையும் முதலாவது கண்டி யுத்தத்தில் காண்பிக்க முடியவில்லை. இப்போது நெப்போலியன் முற்றாக முறியடிக்கப்பட்டதோடு இலங்கையை ஆங்கிலேயரே நிரந்தரமாக ஆள்வார் என்பது அமியன்ஸ் சமாதானத்தாலும், வியன்னா மகாநாட்டின் பூர்வாங்க ஏற்பாடுகளாலும் அறியக்கிடந்தன. எனவே ஆங்கிலேயர் கண்டிமீது தமது பலத்தைக் காட்டுவதற்குத் தகுந்த காலமும் காரணமும் அவர்களுக்கு வாய்ப்பாக இருந்தமை போலவே கருவிகளும் கருத்தாக்களும் சாதகமாக இருந்தது என்பர். கண்டி மன்னனுடன் ஆங்கிலேயர் செய்த முதலாவது யுத்தத்துக்கு எங்ஙனம் பிலிமை மூலகாரணமாய் இருந்தானோ அவ்வாறே ஆங்கிலேயர் இப்போது படை எடுப்பதற்கு எகிலப்பொல மூலகாரணமாய் இருந்தான் என்பது மிகையாகாது.

முன்னர் யென்கின் என்ற ஆங்கிலேயனின் காதை ஒரு ஸ்பானிய மாலுமி அறுத்து விட்டான் என்பதால் 1739ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஸ்பெயின் நாட்டினரோடு யுத்தப் பிரகடனஞ் செய்தார்கள். இப்போது பத்துப் பேருடைய காதுகள், மூக்குகள் அறுபட்டதோடு எழுவர் இறந்துபோனமை யுத்தத்துக்குப் போதிய சாட்டாக இருக்குமா

**மீன் பார்வை**

இல்லையா? முன்னமே கண்டியரசனுடைய படைகள் ஆங்கிலேயருக்குச் சொந்தமான கரைநாடுகளில் புகுந்து சூறையாடி வந்தார்கள் என்பதுவும் ஒரு காரணமாயிருந்தது. இவற்றையெல்லாம் கேட்ட ஆள்பதி பிறவுண்றிக் அவர்கள் தமது படைப் பயிற்சியைக் கண்டியரசனுக்குக் காண்பிக்கத் திடமாகத் தீர்மானித்தார்.

அவருடைய ஆலோசனைச் சபையார் சொன்ன ஆறுதல் மொழிகளை அவர் கேட்கவில்லை. அவர் தாமே படைத்தலைமை தாங்கி 10-1-1815இல் கண்டியை நோக்கி சென்றான். பிறவுண்றிக் படையெடுத்துச் சென்றார் என்பதைப் பார்க்கிலும் அவர் பவனியிற் சென்றார் என்று கூறுவதே பொருத்தமாகும்.

படை எடுப்புக்கு வேண்டிய சகல இரகசியங்களையும் எகிலப்பொல ஆங்கிலேயருக்குச் சொல்லிக் கொடுத்ததோடு தானே அவர்களுடன் போகவும் முன்னின்றான். கண்டியைப் பிடிக்க 1485 ஐரோப்பிய வீரரும் 2259 சுதேச வீரரும் எட்டுப்பிரிவினராகப் பிரிக்கப்பட்டுக் கொழும்பு, காலி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய தானங்களிலிருந்து கண்டியை நோக்கிப் புறப்பட்டனர்.

ஆங்கிலேயர் படை எடுத்தமையை அறிந்த மன்னன் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை முதலில் செய்தான். தனது நம்பிக்கைக்குரியவரான 700 தமிழ் வீரரையும் சிங்களவரில் பலரையும் காவலமைத்தான். மூன்று கோரளை, நான்கு கோரளை, ஏழு கோரளையாகிய இடங்களில் உள்ள தலைவர்களை உள்நாட்டுக்கு அனுப்பி விட்டு நம்பிக்கையுள்ளவர்களை அவ்விடங்களில் நிறுவினான். இச்செயலை விரும்பாத மூன்று கோரளையின் திசாவை (மொலிகொடையின் தம்பி) அரசனுக்கு எதிராகக் கலகஞ்செய்து ஆங்கிலேயர் பக்கம் சார்ந்தான். அதனை வாய்ப்பாகக்கொண்டு ஆங்கிலேயர் அந்த இடத்துக்கு டொயிலி, கூக் ஆகிய பெரியார்களை அனுப்பினார்கள். கூக் தலைமையில் சென்ற படைகள் றூவான்வல பிரதேசத்தை எவ்வித எதிர்பும் இன்றிக் கைப்பற்றினார்கள். அதனைக் கண்ட மொலிகொட புறங்கொடுத்தோடினான்.

பிறவுண்றிக் செய்த யுத்த பிரகடனம் வசீகரமான முறையில் சிங்களத்தில் மொழி

**க.சி.குலரத்தினம்**

பெயர்க்கப்பட்டது. சிங்கள மக்களைத் தமிழ் மன்னனிடமிருந்து மீட்கவும் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் துடைக்கவும் பொது மக்களின் சமயத்தையும் பொருளையும் பாதுகாக்கவும் தாங்கள் படை எடுத்தார்கள் என்று கூறிய பிறவுண்றிக் கண்டிப் பிரமுகர்களின் மதிப்புக்குரிய உத்தியோகங்களை மீள அவர்களுக்கே வழங்குவதாகவும் உறுதி கூறினார்.

(தொடரும்)



அண்மையில், யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தலைமைத்துவப் பயிற்சி காட்சிகள்.


உ
ஐயப்பன் துணை

காரைநகர் – வியாவில்
திருவருள்மிகு ஸ்ரீ பூர்ணா புஷ்கலாம்பிகா சமேத
ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் சுவாமி திருக்கோவில்
புனராவர்த்தன சம்புரோக்ஷண அஷ்டபந்தன நவ(9) குண்டபக்ஷ உத்தம மகா யாக பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேகம்



14.07.2008 திங்கட்கிழமை காலை 9.10 மணி முதல் 10.00 மணி வரை
கிரியைகள் ஆரம்பம் 09.07.2008 புதன்கிழமை
எண்ணெய்க்காப்பு சாத்துதல் 13.07.2008 ஞாயிறு

ஆலயகுரு
பிரம்மஸ்ரீ கு.பாலசந்திர கணேசசர்மா
பிரம்மஸ்ரீ பா.கிரிதரசர்மா

மஹா கும்பாபிஷேகப் பிரதமகுரு
பிரதிஷ்டா வித்தகர், சிவாகம திவாகரன்
ஸ்ரீ விஸ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்

சர்வபோதகச்சாரியார்
வேதாகம ஞான பாஸ்கரன்
சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்
(தர்மசாஸ்தா குருகுல அதிபர், காயத்ரி பீடாதிபதி, இணுவில்)

அனுசரணை
யாழ் றெக்ஸ்
16, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 9475

ஒளி அமைப்பு
கோப்பாய் மனோ லைட்

மங்கள வாத்தியம்
கோவில் ஆஸ்தான நாதஸ்வர வித்துவான்
காரை கணேசன் பவப்பிரியன் குழுவினர்
ஈழத்து தலை சிறந்த நாதஸ்வர தவில் வித்துவான்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.
மகேஸ்வர பூசை இடம்பெறும்.
ஐயப்பன் அடியார்கள் மற்றும் அனைவரையும் கலந்து சிறப்பித்து ஐயனார் அருளைப்பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வியாவில், காரைநகர்.
இங்ஙனம் :- அறங்காவலர்

# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் 8


பகுதி –I
நேரம் – 45 நிமிடம்

வலம்புரி ஆசிரியர் குழு


**இவ் வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.**
**தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின் படி எல்லா வினாக்களுக்கும் இத் தாளிலேயே விடை எழுதுக.**

**☼ கீழே வட்டங்களினுள் தரப்பட்டுள்ள எண்களை பெறுமானம் கூடுகின்ற ஒழுங்கில் (ஏறு வரிசையில்) அம்புக்குறிகளினால் இணைக்குக.**


1.




2.




**☼ உரு காட்டுவது பிள்ளைகள் நால்வர் முற்றத்தில் வட்டங்கள் மூன்றை வரைந்து அவ்வட்டங்கள் மூன்றின் மீதும் நின்று கொண்டிருக்கும் முறையே ஆகும்.**




சிறிய வட்டத்தின் “ஆரை” 1 m ஆகும்.
நடுவில் உள்ள வட்டத்தின் “ஆரை” 2m ஆகும்
பெரிய வட்டத்தின் “ஆரை” 4m ஆகும்.
Oஎன்பது மூன்றினதும் மையமாகும்.

03. Oவிலிருந்து சமனான தூரத்தில் நின்று கொண்டிருக்கும் பிள்ளைகள் யாவர்?
(..............................................................)


04..D நின்று கொண்டிருப்பது A யிற்கு எத்தனை மீற்றர் தூரத்தில்?
(..............................................................)

**☼ A,B,C,D எனும் பிள்ளைகள் நால்வர் தாம் நின்று கொண்டிருக்கும் வட்டத்தின் மீது சரியாக ஒரு சுற்று வீதம் சென்றார்கள்.**

05. I.குறைவான தூரம் சென்றுள்ளவர் யார்? (..................................)
II. கூடுதலான தூரம் சென்றுள்ளவர் யார்? (..................................)

06. I.எத்தனை பிள்ளைகள் சமனான தூரம் சென்றுள்ளனர்?(..................................)
II. சமனான தூரம் சென்றுள்ள பிள்ளைகளின் பெயர்களை எழுதுக? (......................)

**☼ குறித்த ஒரு சதுர வடிவமான காணி A,B,C,D எனும் நால்வருக்கிடையே பகிரப்பட்ட முறையை கீழே உள்ள உரு காட்டுகிறது.**





Aயிற்குக் கிடைத்த காணியின் பருமன்,Bயிற்குக் கிடைத்த காணியின் பருமனின் நான்கு மடங்காகும்

07. B யிற்குக் கிடைத்த காணியின் பருமன் எத்தனை பரப்பு?
(..............................................)

08. D யிற்குக் கிடைத்த காணியின் பருமன் எத்தனை பரப்பு
(..............................................)

09.முழுக்காணியின் பருமன் எத்தனை பரப்பு?(..............................................)

**☼ இவ்விரு காட்டுவது A,B,C,D எனும் காகித அட்டை துண்டில் வரையப்பட்டுள்ள ஒரே சம அளவுள்ள நான்கு வட்டங்களாகும். வட்டம் ஒன்றின் ஆரை 4 cm ஆகும் .**





10. A,B,C,D எனும் காகித அட்டைத்துண்டு சதுர வடிமானதா ?செவ்வக வடிவமானதா?
(..............................................)

11. இக்காகித அட்டை துண்டின் Bயிலிருந்து Cவரையுள்ள நீளம் எவ்வளவு?
(..............................................)

12. ஓர் எறும்பு Aயில் இருந்துB,Cயினூடாக D வரை சென்று மீண்டும் அதே வழியாக A வரை திரும்பி வந்தது எறும்பு பயணம் செய்துள்ள முழுத் தூரத்தையும் காண்க?
(..............................................)

**☼ பிள்ளைகள் நால்வர் இவ்விருவராக நின்று கொண்டிருக்கும் போது அவர்களின் உயரங்கள் பின்வரும் உருக்களினால் காட்டப்பட்டுள்ளன.**




13.சுனில்,கமல்,ரவி, அனில் ஆகிய பிள்ளைகள் நால்வருள் உயரம் கூடியவர் யார்?
(..............................................................)

14.பிள்ளைகள் நால்வருள் குள்ளமானவர் யார்?
(..............................................................)

15.பிள்ளைகள் நால்வரின் பெயர்களை அவர்களின் உயரங்கள் அதிகரிக்கும் ஒழுங்கின் முறையே எழுதுக?
(..............................................................)

**☼ ஆங்கில நெடுங்கணக்கில் சில எழுத்துக்கள் கீழே உள்ள வரிசையில் தரப்பட்டுள்ளன.**

**A, B, C, D, E, F, G, I, J, K, L, M, N, O, P**

**☼ வெற்றுக்கூடுகளை நிரப்புக.**

16. **A, C, F, J** ☐

17. **AC,BD,CE,DF** ☐


18. **AC,DF,GI,JL** ☐

**☼ பின்வரும் உருக்களில் வெற்றிடங்களுக்கு பொருத்தமான எண்களை அவ் வெற்றிடங்களிலேயே எழுதுக.**

19.

| | | |
|---|---|---|
| 4 | 3 | 8 |
| | 5 | 1 |
| 2 | 7 | 6 |

20.





21.0,9,1,8, ஆகிய எண்கள் நான்கையும் பயன்படுத்தி எழுதக்கூடிய 4 எண்கள் கொண்ட மிகப் பெரிய எண் யாது? (..................................)

22.ஒரே சம நீளமுள்ள , ஈர்க்குத்துண்டுகளை உபயோகித்து ரோமன் எண்களைச் செய்த ஒரு பிள்ளைக்கு, 19தைச் செய்வதற்கு ஈர்க்குத்துண்டுகள் 5 தேவைப்பட்டன. அதற்கமைய 23 ஐ ரோமன் எண்ணில் செய்வதற்கு அப்பிள்ளைக்கு எத்தனை ஈர்க்குத் துண்டுகள் தேவைப்படும்? (......................................)

23.பக்கம் ஒன்றின் நீளம் 10 சென்ரீமீற்றர் உடைய சதுரவடிவமான காகித அட்டைத்துண்டு ஒன்றை சரியாக இரண்டாக வெட்டிய பின்னர் சம அளவுள்ள செவ்வக வடிவங்கள் 2 கிடைக்கும் அச்செவ்வக வடிவத்தில் (ஒது துண்டின்) நீளத்தையும் அகலத்தையும் காண்க.
அகலம் (......................................) நீளம் (......................................)

24.2இற்கும் 155ற்கும் இடையில் உள்ள மிகச் சிறிய ஒற்றை எண் ஒன்றையும் மிகப்பெரிய இரட்டை எண் ஒன்றையும் எழுதுக?
ஒற்றை எண் (......................................) இரட்டைஎண் (......................................)

25.



உரு காட்டும் வட்ட வழ்வமான காகித அட்டைத் துண்டிலிருந்து நிழற்றப்பட்டுள்ள அளவில் சி சிய காகத அட்டைத்துண்டுகள் எத்தனை வெட்டலாம்?
(..............................................................)

**☼ பின்வரும் நொடிகளுக்குரிய விடைகளை உரிய வெற்றிடங்களில் எழுதுக.**

26. நான் பிரயாணம் செய்வது கடலில் ஆகும். எனக்கு ஏராளமான பொருட்களையும் மக்களையும் சுமந்து செல்ல முடியும். நான் யார்?
(..............................................................)

27.அதிகம் நான் தோவைப்படுவது வயது முதிர்ந்தவர்களுக்காகும் புத்தகங்களையோ பத்திரிகைகளையே வாசிப்பதாயின் நான் இல்லாமல் அவர்களால் இயங்கவே முடியாது கண் பார்வை குறைந்த சில இளைய சமூதாயத்தினருக்கும் நான் மிகவும் தேவைப்பட்டவன் நான் யார்?
(..............................................................)

28.பகற்காலங்களிலும் அதிகமாக இராக்காலங்களிலும் சிறுவர்களும் பெரியோர்களும் என்னைச் சூழ்ந்து கொள்வர் படமும் ஒலியும் என்னிலிருந்து ஒரே நேரத்தில் வெளியாகும். எமது நாட்டைப்போல் வேறு நாடுகளின் விபரங்களையும் என்னிலிருந்து தெரிந்து கொள்ளலாம். நான் யார்?
(..............................................................)

**☼ பின்வரும் கவிதையை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாவுக்கு விடை தருக.**

வெள்ளத்தால் போகாது
வெந்தணலால் வேகாது
கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவொலிய குறைபடாது

29. மேலே உள்ள கவிதை எதைப்பற்றி கூறுகிறது?
1.வெள்ளம் 2.கல்வி 3.தணல் 4.கொலை

30.வெந்தணல் என்பதன் பொருள்
1.வெள்ளம் 2.வெம்மை 3.நெருப்பு 4.மழை

**☼ மிகவும் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

31.நத்தையின் முட்டையின் நிறம் யாது?
1.வெள்ளை 2.மஞ்சள் 3.சிவப்பு 4.கபிலம்

32.தரப்பட்டுள்ள தாவரங்களில் விலங்குகளில் தங்கியிருக்கும் தாவர வகையின் பெயரைக்குறிப்பிடுக?
1. துளசி 2. சீதேவியார் செங்களுநீர்
3. கெண்டித்தவாரம் 4.குப்பை மேனி

33.எமது தேசிய விளையாட்டு எது ?
1. சடுகுடு 2. எல்லே 3. கிரிக்கெற் 4. கரப்பந்தாட்டம்

34.பூமிக்கு மிக அண்மையில் உள்ள கோள் எது?
1. புதன் 2. சுக்கிரன் 3. செவ்வாய் 4. வியாழன்

35.இலங்கை நாட்டுக்கே உரிய பிராணி?
1. மர அணில் 2. காகம் 3. சென்பகம் 4. மயில்

**☼ 36-40 வரையிலான வினாக்களில் ஒரு பிரச்சினையும் இரு கூற்றுக்களும் தரப்பட்டுள்ளன. இவ்விரு கூற்றுக்களும் அப்பிரச்சினையை தீர்க்கப் போதுமானவையா என முடிவு செய்க**

**கூற்று 1 மட்டும் போதும் எனில் விடை A யையும்**
**கூற்று 2 மட்டும் போதும் எனில் விடை Bயையும்**
**இரு கூற்றுக்களும் தேவை எனில் விடை Cயையும்**
**இரு கூற்றுக்களும் போதாது எனில் விடை Dயையும் தெரிவு செய்க**

36. பிரச்சினை : உமது அப்பா ஒரு ஆசிரியரா?
கூற்று1 :ஆம் ஆசிரியர்
கூற்று2 :எனது அம்மாவும் ஓர் ஆசிரியர்
**1.A 2.B 3.C 4.D**

37. பிரச்சினை : தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் நீர் பெற்ற புள்ளி யாது?
கூற்றுI : எனது தங்கை பெற்ற புள்ளி 144.
கூற்றுII: நானும் தங்கையும் ஒரே புள்ளிகளையே பெற்றோம்
**1.A 2.B 3.C 4.D**

38. பிரச்சினை : சித்திரை வருடப்பிறப்பு எப்போது கொண்டாடுவார்கள்?
கூற்று I: தமிழர்கள் கொண்டாடும் போது
கூற்றுII: சித்திரை மாதம் 14ஆம் திகதி
**1.A 2.B 3.C 4.D**

39. பிரச்சினை : மின்குமிழில் இருந்து வெளிவிடப்படும் சக்திகள் எவை?
கூற்றுI: ஒளி சக்தி
கூற்று II:வெப்ப சக்தி
**1.A 2.B 3.C 4.D**

40. பிரச்சினை : பொருள் ஒன்றை பார்ப்பதற்கு அவசியமானவை
கூற்றுI : வெளிச்சமும் பொருளும்.
கூற்றுII : கண்ணும் பொருளும்
**1.A 2.B 3.C 4.D**

# அடிக்கடி கருச்சிதைவு ஆபத்தே...!

உலக அளவில் ஆறு இலட்சம் கருச்சிதைவுகள் ஏற்படுகின்றன. ஆயிரம் கர்ப்பிணிகளில் பதின்மூன்று பெண்களுக்கு அபார்ஷன் ஆகிவிடுகிறது. இந்தப் பதின்மூன்றில் ஐந்து பெண்களுக்கு தானாகவே அபார்ஷன் ஆகிறது. ஆனால், மீதி எட்டுப் பெண்கள் தாங்களாகவே முன்வந்து அபார்ஷன் செய்கிறார்கள். இப்படி அபார்ஷன் செய்ய முன் வரும் பெண்களில் அதிகமானோர் 25 வயதுக்குக் குறைவானவர்கள் என்பதும் பலர் படிக்கும் இளம் பெண்கள் என்பதையும் லண்டனிலுள்ள ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

இதுபோன்ற பல ஆய்வுகளில் திருமணமான பெண்களை விட திருமணமாகாத பெண்களே அதிகமாக அபார்ஷன் செய்ய முன்வருகிறார்கள் என்ற ஆய்வுத் தகவல்கள் அதிர்ச்சியூட்டுகின்றன. அப்படி அடிக்கடி அபார்ஷன்கள் செய்வதால் இளம் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து தென்னிந்திய மகப்பேற்று மருத்துவர் தமிழிசை செளந்தர்ராஜனிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் தரப்பட்டுள்ளன.

இன்றைய வாழ்க்கைச் சூழலில் அபார்ஷன் என்று சொல்லக் கூடிய கருக்கலைப்பு அதிகரித்துக் கொண்டே போகிறது. ஒரு பெண்ணுக்கு தானாகவே கர்ப்பம் கலைந்து விடுவதை மருத்துவ சிகிச்சைகளின் மூலம் தீர்த்து விடலாம். ஆனால், தானாகவே முன்வந்து கருவைக் கலைக்க வருவது கொலை செய்வதற்குச் சமம். மருத்துவ உலகில் பல விதமான தடுப்பு முறைகள் வந்துவிட்டாலும் கூட திருமணமான பெண்களை விட திருமணமாகாத இளம்பெண்கள் செய்யும் அபார்ஷன்கள் மிக மிக வேதனைக்குரியது; வெட்கக் கேடானதும் கூட.



### பெண்களுக்குத் தானாகவே கர்ப்பம் கலைந்து விடுவதற்கு என்ன காரணம்?

சில காரணங்களைக் கூறலாம். குறிப்பாக, மரபணு பிரச்சினைகளால் தாயின் கருவில் ஏற்படும் குறைபாடு, தாயின் கர்ப்பப் பையில் ஏற்படும் சில குறைபாடுகள், தாயின் உடம்பில் நோய்த்தாக்குதல், தாயின் உடம்பில் திடீர் கிருமித் தாக்குதல் ஆகிய காரணங்களால் அபார்ஷன் ஆகிவிடுவதோடு அளவுக்கு அதிகமான பிரயாணம், அதிக எடை, பலம் குறைந்திருப்பது, அளவுக்கு அதிகமான டென்ஷன், மன அழுத்தம் ஆகிய காரணங்களால் கூட கர்ப்பம் தானாகவே கலையக் கூடிய வாய்ப்பு உள்ளது

### இந்தப் பிரச்சினைக்கு என்ன செய்ய வேண்டும்?

மரபணு பிரச்சினைகளால் தாயின் கருவில் ஏற்படும் குறைபாட்டை மரபணுச் சோதனையின் மூலம் கண்டுபிடித்து அதற்கேற்ற சிகிச்சையுடன் குழந்தைப் பேற்றை கவனமாக எதிர் நோக்க வேண்டும். அதனால் தான் இரத்த சொந்தத்தில் (அக் காவின் மகன், மாமனின் மகள், இரத்தம் சார்ந்த உறவினர்) திருமணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்று மருத்துவ உலகம்எச்சரிக்கிறது. அதே போல் கணவனுக்கு RH பொஸிட்டிவ் மனைவிக்கு RH நெகடிவ் என்ற இரத்த மாதிரி இருந்தால் கருவில் இருக்கும் குழந்தை பாதிக்க வாய்ப்புள்ளது. இதை முன்கூட்டியே அறிந்து ஆன்டி D போன்ற மருந்துகள், ஊசிகள் கொடுத்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் கர்ப்பமாகும்போது கூட கருக் கலைந்துவிடும் வாய்ப்புகள் அதிகம். அதனால் மிகக் குறைந்த வயதும் இல்லாமல் அதிக வயதும் ஆகாமல் திருமணம் செய்து கொள்வது சிறந்தது.

கர்ப்பப் பை பிரச்சினைகள் என்று எடுத்துக் கொண்டால்... கர்ப்பப்பை வளர்ச்சி அடையாமல் சிறியதாகக் காணப்படுவது, கர்ப்பப்பை பிளவுபட்டு அல்லது நாக்கு மாதிரி சவ்வு வளர்ச்சி அடைந்து தொங்கிக் கொண்டிருப்பது, பைப் ரோய்ட் கட்டிகள், கர்ப்பப்பை தளர்ந்து காணப்படுவது, காது போன்ற இரு பக்கமும் இறக்கை விரித்தாற்போல் காணப்படுவது என எந்த மாதிரி குறைபாடு என்பதைக் கண்டறிந்து அதற்கேற்றாற் போல சிகிச்சை எடுத்துக் கொள்ளவேண்டும்.

உடல் நிலை பாதிப்புகள் என்பது பெண்களுக்கு ஏற்படும் நீரிழிவு வியாதி, கர்ப்பகால நீரிழிவு வியாதி, இரத்த அழுத்தம், இரத்த சோகை, தைரோய்ட் மற்றும் சிறுநீரக வியாதிகள் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயங்கள். கர்ப்ப காலத்தில் சரியான உணவுக் கட்டுப்பாடு, உடற் பயிற்சி மற்றும் மருத்துவரின் ஆலோசனைப்படி நீரிழிவு வியாதியையும், இரத்த அழுத்தத்தையும் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். நல்ல சத்தான உணவு மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகளை சாப்பிட்டு கொடிய பின் விளைவுகளைக் கொண்டு வரும் இரத்த சோகையை விரட்டவேண்டும். சிறுநீரக வியாதிகளுக்கு மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொள்ளத் தயங்கக் கூடாது.

"அக்யூட் இன்பெக்ஷன்ஸ்" எனப்படும் திடீர் தொற்று வியாதிகளில் ஏற்படும் தாக்குதல், அதாவது... வைரஸ், பக்டீரியாவால் ஏற்படும் காய்ச்சல் மற்றும் அம்மைத்தொற்று. இதற்கும் மருத்துவரின் உதவியுடன் முற்றுப்புள்ளி வைக்கமுடியும். இவை எல்லாவற்றையும் மீறித் தானாகவே அபார்ஷன்ஆகிவிடுவதை நினைத்துக் கவலைப்படவேண்டாம். கடவுளே நன்மை செய்வதற்காக அந்தக் கருவைக் கலைத்துவிட்டார் என்று மன திருப்தி அடைந்து கொள்ளவேண்டும். ஏனெனில், மேற்கண்ட பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட தாயின் கருவை எ்டுத்து பரிசோதனை செய்து பார்த்த போது, அது ஏதோ ஒரு குறைபாடு கொண்ட கருவாக இருந்திருக்கிறது. ஒருவேளை அந்தக் கரு குழந்தையாக பிறந்தாலும் ஏதோ ஒரு குறைபாட்டுடன் பிறக்கும் வாய்ப்புகள் இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. அதில் சில நல்ல குழந்தைகளும் ஆகிவிடுவதும் உண்டு. எனவே அபார்ஷன் ஆகாத அளவுக்கு முன் கூட்டியே பரிசோதனைகள் செய்து மகப் பேற்று மருத்துவரின் ஆலோசனைப்படி வாழ்வது உத்தமம்.

### சரி, தானாகவே முன் வந்து கருவைக் கலைத்துக் கொள்ளும் முறை பற்றி கூறுங்களேன்?

நாம் இருவர் நமக்கு இருவர்.நாம் இருவர் நமக்கொருவர் என்ற நிலைகூட மாறி நாம் இருவரும் குழந்தை. நமக்கு ஏன் குழந்தை என்கிற அளவுக்கு மாறிவிட்ட காலம். இதற்கு அதி நவீன வாழ்க்கை பொருளாதாரச் சூழல், விலைவாசி உயர்வு எனக் காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்தக் காரணமெல்லாம் திருமணமான தம்பதிகள் சம்பந்தப்பட்ட காரணங்கள். பஷன் (Fashion) உலகத்துக்குள் புகுந்து பண்பாட்டைச் சீரழிக்கும் திருமணத்துக்கு முன்பே செக்ஸ் வைத்துக் கொள்ளும் முறையற்ற வாழ்விலும் பல கொலைப் பிரசவங்கள் (அபார்ஷன்) அரங்கேறிக் கொண்டிருப்பது மற்றொரு காரணம்.

### அபார்ஷன் என்கிற அபாய கட்டத்திற்கு செல்லாமல் இருக்க தற்காப்பு முறைகள் என்னென்ன?

ஆணாக இருந்தால் ஆணுறை அணிந்து கொண்டோ, பெண் பெண்ணுறை அணிந்தோ செக்ஸில் ஈடுபடலாம். கணவன் மனைவியாக இருந்தால் முதல் குழந்தை பிறந்தவுடன் கொப்பர்-டி அணிந்து தாம்பத்திய உறவில் ஈடுபடலாம். அதுவும், நோர்மல் டெலிவரி என்றால் பத்து நாட்கள் கழித்தும், சிசேரியன் டெலிவரி என்றால் மூன்று மாதம் கழித்தும் கொப்பர் -டி அணிவது நல்லது. திரும்பவும் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் கொப்பர்-டியை எடுத்துவிட்டு குழந்தை பெற்றுக்கொள்ளமுடியும். கொப்பர் -டி அணிந்து கொள்ளாத பெண்கள் மகப்பேற்று மருத்துவரின் ஆலோசனைப் படி கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ளலாம்.




பீரியட்ஸுக்கு (மாதவிடாய்) பிறகு முதல் ஏழு நாட்களும் கடைசி ஏழு நாட்களும் கரு உருவாகும் வாய்ப்புக் குறைவு.எனவேதான் கரு உருவாகும் வாய்ப்பு அதிகமுள்ள அந்த இடைப்பட்ட(21 நாட்களில்) காலத்தில் கருத்தடை மாத்திரைகளைச் சாப்பிடவேண்டும் என்று மருத்துவர்கள் பரிந்துரை செய்கிறார்கள். அதுவே கிராமப்புற பெண்களாக இருந்தால் பீரியட்ஸுக்குப் பிறகு முப்பது நாட்களுக்கும் மாத்திரைகள் பரிந்துரைக்கப்படும். அதற்கும் காரணம் உண்டு. கணக்கு வைத்துக் கொண்டு சரியான நாளில் சாப்பிடமாட்டார்கள் என்பதால் முதல் ஏழு மாத்திரைகளிலும் கடைசி ஏழு மாத்திரைகளிலும் கருத்தடை மருந்துள்ள மாத்திரைக்குப் பதிலாக சாதாரண சத்து மாத்திரைகள் இருக்கும்.

இந்தக் கருத்தடை மாத்திரைகள் சாப்பிட முடியாதவர்கள் அவசர நிலை கருத்தடை மாத்திரை செக்ஸ் வைத்துக்கொண்ட 24 மணி நேரத்துக்குள் போட்டுக் கொண்டால் கரு உருவாவதைத் தடுத்துவிடலாம். (தொடரும்)

---

# வயிற்றுப்பகுதி ஊளைச் சதையை கரைப்பது எப்படி?

உடம்பை ஸ்லிம்மாக வைத்துக்கொள்ளவே இப்போதெல்லாம் பெண்கள் பெரும்பாலும் விரும்புகின்றனர். அதற்காக உடலை வருத்திக் கொள்வது மட்டுமன்றி பெருமளவில் பணத்தையும் செலவிட்டு வருகின்றனர். ஆனால் எல்லோருக்கும் இதன்மூலம் நல்ல பலன் கிடைப்பதில்லை. சிலருக்கு உடற் பருமனை விட வயிற்றுப் பகுதியில் அளவுக்கு அதிகமாக ஏற்படும் தசை வளர்ச்சியே அவர்களது உடலில் அவலட்சணத்தை ஏற்படுத்தி விடுகின்றது. இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து செய்தால் வயிற்றுப் பகுதி சதையைக் கரைத்துக் கச்சிதமாக்கிவிடும் என்கின்றனர் அழகுக் கலை நிபுணர்கள்.



- தரையில் மல்லாக்கப்படுத்து முட்டியை மடக்கிக் கொள்ளுங்கள் கால்களும், முட்டிகளும் சற்றே பிரிந்திருக்கட்டும்.
- கைகளை தலைக்குப் பின்னால் கோர்த்து தலையை நெஞ்சுக்குக் கொண்டு வாருங்கள். பின்னர் தலையைக் கீழே கொண்டு போங்கள். இதுபோல தொடர்ந்து செய்யுங்கள்.
- தலையைத் தூக்கும்போது மூச்சை வெளியே விடுங்கள்.தலையை தரையில் வைக்கும்போது மூச்சை உள்ளிழுங்கள்.

### மேல் உடம்பு உறுதிபெற...

இந்தப் பயிற்சி, உங்களின் மேல் உடம்பையும், வயிற்றுப் பகுதித் தசைகளையும் உறுதிப்படுத்தும்.

- தரையில் குப்புறப்படுங்கள். முழங்கைகளை ஊன்றி நிமிருங்கள். அதேபோல் கால் கட்டை விரலை ஊன்றி முட்டியை மேலே உயர்த்துங்கள்.
- இப்படியே 30 முதல் 60 நொடிகள் வரை இருங்கள். எழுந்திருக்கும்போது ஒரு காலை முன்னே வைத்து எழுந்திருங்கள்.
- இந்தப் பயிற்சி முழுவதும் இயல்பாகவே சுவாசியுங்கள்.

### பின்புறம்

இந்தப் பயிற்சி, உங்களின் பின்புற கீழ்ப்பகுதியை பலமாக்கும்.

- மல்லாக்கப்படுத்து, உங்கள் தலைக்கு அருகே நிற்கும் நண்பரின் கால்களை கைகளால் பிடித்துக்கொள்ளுங்கள்.
- நேராக நிற்கும் உங்கள் நண்பரை நோக்கி கால்கைக் கொண்டு வாருங்கள். நண்பரை உங்கள் கால்களை கீழ்நோக்கி அழுத்திச் சொல்லுங்கள்.
- கீழே அழுத்தும் உங்களின் நண்ப ருக்கு எதிராக கால்களை மேல்நோக்கி உயர்த்தி சிறிதுநேரம் அப்படியே வைத்திருங்கள்.

### நாற்காலிப் பயிற்சி

- நல்ல உறுதியான நாற்காலியில் முதுகை வளைக்காமல் நிமிர்ந்து உட்காருங்கள். நாற்காலியின் பக்கவாட்டில் கைகளால் பற்றிக்கொள்ளுங்கள்.
- முதுகை வளைக்காமல் சற்று முன்னால் குனியுங்கள். அதேநேரம் கால்களை வளைத்து, மூட்டுக்களை நெஞ்சை நோக்கிக் கொண்டு வாருங்கள்.
- கால்களை மடக்கி நெஞ்சுக்குக் கொண்டு வரும்போது மூச்சை விடுங்கள். இந்தப் பயிற்சியைச் செய்யும்போது உங்களின் பின்புற கீழ்ப் பகுதியில் வலி ஏற்பட்டால் நீங்கள் பயிற்சியை தவறாகச் செய்கிறீர்கள் என்று அர்த்தம்.
- கால்கள் தான் வளைய வேண்டும். வயிற்றுப் பகுதியில் தசைகள் இறுக்கமாக இருக்கவேண்டும்

### கால்களை மாற்றிப் போட்டு...

இந்தப் பயிற்சி, உங்கள் வயிற்றின் பக்கவாட்டுப் பகுதியைச் சீராக்கும்.

- மல்லாக்கப் படுத்து கால்களை உயர்த்துங்கள், கைகளை இருபுறம் வைத்திருங்கள்.
- கால்களைப் பின்னிய நிலையில் நேராக வைத்து, ம்ழங்காலை மடக்கி நெஞ்சை நோக்கிக் கொண்டு வாருங்கள்.
- முட்டியை மடக்கும்போது மூச்சை வெளியே விடுங்கள். கால்களை நேராக்கும் போது மூச்சை உள்ளிழுங்கள்.

### பக்கவாட்டில் கச்சிதமாக...

வயிற்றின் பக்கவாட்டுச் சதைகளைக் கரைத்து நல்ல வடிவம் தர சிறந்த பயிற்சி இது.



- தரையில் ஒருக்களித்துப் படுங்கள். முழங்கையை ஊன்றி உடம்பை உயர்த்துங்கள்.
- மற்றொரு கையால், ஊன்றியிருக்கும் கையில் மணிக்கட்டைப் பிடித்துக்கொள்ளுங்கள்.
- இடுப்பை உயர்த்தி பக்கவாட்டுத்தசையை இறுக்கமாக்குங்கள். இப்படியே 40முதல் 60 நொடிகள் இருந்த பின் சாதாரண நிலைக்குத் திரும்புங்கள்.
- அடுத்தபுறம் திரும்பி இதே பயிற்சியைச் செய்யுங்கள்.

### இடுப்பு தசை

இடுப்பில் வளையம் போல சேர்ந்திருக்கும் கூடுதல் கொழுப்பைக் கரைக்க இந்தப் பயிற்சி உதவும்.

- நீங்களும், உங்கள் நண்பரும் எதிரெதிராகப் படுத்து கால்களை உயர்த்தி, குதிகால்கள் படும்படி வைத்துக்கொள்ளுங்கள்.
- தலைக்குப் பின் கைகளைக் கொடுத்துத் தாங்கி,இடது முழங்கையை வலது கால் முட்டியை நோக்கியும், வலது முழங்கையை இடது கால் முட்டியை நோக்கியும் மாறி மாறி கொண்டு வர வேண்டும். அதேநேரம் உங்கள் நண்பர் இதே பயிற்சியை எதிர்மறையாகச் செய்யவேண்டும்.
- பயிற்சியின் போது உங்கள் உடம்பின் கீழ்ப்பகுதி மேலெழும்பக் கூடாது.


### மாற்றி...மாற்றி...

உடம்பின் மேல்பகுதி, கீழ்ப்பகுதி பக்கவாட்டுத் தசைகளையும், வயிற்றுப் பகுதி தசைகளையும் சீர்படுத்துகின்றது இப் பயிற்சி.

- நண்பரும்,நீங்களும் எதிரெதிராகப் படுத்து,முட்டியை வளைத்து பாதங்களைப் பொருத்திக் கொள்ளுங்கள்.
- உங்களின் வலது காலை நீட்டி, உங்கள் நண்பரின் இடது காலை மடக்குங்கள். அதேநேரம் உங்கள் நண்பர் தனது வலது காலால் இப்படிச் செய்வார்.

இப்படி சிறிதுநேரம் மாற்றி மாற்றிச் செய்யுங்கள்.

- உங்கள் கைகளை தலைக்குப் பின்னர் கோர்த்து, உங்கள் வலது காலால் அழுத்தும் போது வலதுமுழங்கையை இடது கால் முட்டிக்குக்கொண்டு வாருங்கள். இதையே தொடர்ந்து மாற்றி மாற்றிச் செய்யுங்கள்.



# பயங்கரவாதிகளுக்கும் சுதந்திரப் போராளிகளுக்கும் இடையில் தெளிவான வேறுபாடுகள் உண்டு

## கலாநிதி பிரான் செனவிரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதிகளுக்கும் சுதந்திரப் போராளிகளுக்கும் இடையில் தெளிவான வேறுபாடுகள் இருப்பதாக கனடாவில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் இலங்கையைப் பிறப்பிடமாகக்கொண்ட அவுஸ்ரேலிய மருத்துவர் பிரான் செனவிரட்ன தெரிவித்திருப் பதாக கனேடியப் பத்திரிகையான நஷனல் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வடபகுதியை தனியான சுதந்திர அலகாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென கனடாவின் டவுன்ஸ் வியூ மைதானத்தில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் முக்கிய உரையாற்றிய அவுஸ்ரேலிய மருத்துவர் பிரான் செனவிரட்ன கூறியிருந்ததாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைவிட இலங்கையின் இனப் பிரச்சினைக்கு மாற்றுத்தீர்வு இல்லை என அவர் கூறியதாகவும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

உலங்குவானூர்திகள் குண்டுத் தாக்குதல்களை நடத்தும் ஒளிப்படங்களைக் காண்பித்து இங்கு செனவிரட்ன இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக பல கொலைகளைச் செய்துவருகின்றது எனக் குற்றஞ் சாட்டியதாக நஷனல் போஸ்ட் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கும் சுதந்திரப் போராட்டத்துக்கும் இடையில் தெளிவான வித்தியாசம் உள்ளது எனச் சுட்டிக்காட்டியிருக்கும் அவர் தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதர வாக அனைத்து மக்களும் ஒன்றிணைய வேண்டுமெனக் கோரிக்கை விடுத்ததாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

உலகத் தமிழர் அமைப்பு கனேடிய அரசாங்கத்தால் மூடப்பட்டமைக்கு பொங்குதமிழ் நிகழ்வில் கண்டனங்கள் வெளியிடப்பட்டிருந்ததுடன் கனடாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் பெருமளவானவர்கள் கலந்து கொண்டதாகவும் இந்த நிகழ்வு நடைபெறும் இடம்இறுதி நேரத்திலேயே அறிவிக்கப்பட்டதாகவும் நஷனல் போஸ்ட் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொங்கு தமிழ் நிகழ்வுக்குப் பொலிஸார் அனுமதி வழங்கக்கூடாது என ஐக்கிய இலங்கைத் தேசிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ள போதும் அது ஏற்றுக் கொள்ளப்பட வில்லையெனவும் விடுதலைப்புலிகள் அமைப்பை கனடா அரசாங்கம் தடைசெய்துள்ள போதும் அந்த அமைப்பின் கொடிகளைத் தாங்கியவாறு பெருமளவானவர்கள் பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்டிருந்ததாகவும் நஷனல் போஸ்ட் தனது செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### இலங்கைத் தூதுவர் மறுப்பு

எனினும் தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் மோதல்களை முன்னெடுத்துள்ளது என வைத்தியர் செனவிரட்ன முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டை கனடாவுக்கான இலங்கைத் தூதுவர் பந்துல ஜெயசேகர மறுத் திருப்பதாகவும் நஷனல் போஸ்ட் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளே பெருமளவான தமிழ் தலைவர்களைப் படுகொலை செய்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் மிகவும் மோசமான பயங்கரவாத அமைப்பு. தனது மோசமான போரை கனடாவுக்கும் அது கொண்டு வந்துள்ளது என பந்துல ஜயசேகர கூறியுள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஒரு இலட்சத்துக்கும் அதிக மானவர்கள் கலந்து கொண்டிருந்ததாக தமிழ் இணையத்தளங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

# தேவதாஸன் தொடர்பாக விஜித ஹேரத்திடம் இரகசியப் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கொழும்பு தாக்குதல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு பொலிஸாரின் விசாரணையில் இருக்கும் திரைப்பட கூட்டுஸ்தாபனமுன்னாள் இயக்குனர்களில் ஒருவரான தேவதாஸனை அப் பதவிக்கு நியமித்தது தொடர்பாக ஜே.வி.பியின் பிரச்சார செயலாளரான விஜித ஹேரத் ஒரு மணி நேரத்துக்கு மேல் இரகசியப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.



நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு இரகசிய பொலிஸாரினால் தான் அழைக்கப்பட்டதாகவும் அங்கு சென்ற போது தேவதாஸனை திரைப்பட கூட்டுஸ்தாபனத்தில் இயக்குனர் பணிக்கு அமர்த்துவதற்கு முன் அவரை எப்படித் தெரியும் என்றும் அவருக்கும் எனக்கும் தனிப்பட்ட தொடர்புகள் இருந்தனவா? அவரை அப்பதவிக்கு அமர்த்துவதற்கு என்ன காரணம் போன்ற கேள்விகள் இரகசிய பொலிஸாரால் கேட்கப்பட்டதாகவும் ஒரு கலைஞர் என்ற ரீதியிலும் கலை அமைப்புக்களது வேண்டுதல்களை கணக்கில் எடுத்தும் அவரை தான் அப் பதவிக்கு அமர்த்தியதாகவும் இரகசியப் பொலிஸாரிடம் தான் கூறியதாக விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஆனாலும் விஜித ஹேரத் மற்றும் ராமலிங்கம் சந்திரசேகரன் ஆகிய இரு அமைச்சர்களையும் இரகசியப் பொலிஸார் விசாரணை செய்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான ரஞ்ஜித் குணசேகர தெரிவித்துள்ளார். (அ)

# ஒரே சுரங்கத்தில் 15 டன் தங்கம்! சீனாவில் கண்டறியப்பட்டுள்ளது

(சீனா)

சீனாவில் ஒரே சுரங்கத்தில் 15 டன் தங்கம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. தென் மேற்கு குவாங்ஜி பகுதியில் நானெங்கில் உள்ள அந்த சுரங்கத்தில் முன்னதாக 5 டன் தங்கம் இருக்கலாம் என கணக்கிடப்பட்டது.

ஆனால் அச் சுரங்கத்தில் தற்போது 15டன் இருப்பது தெரிய வந்துள்ளதாக சீனாவின்தேசிய சுங்க நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். உலக அளவில் பூமிக்கு அடியில் தங்கம் அதிகம் இருப்பு உள்ள நாடுகளின் பட்டியலில் சீனா 7–ஆவது இடத்திலும் தங்கம் அதிகம் உற்பத்தி செய்யும் நாடுகளில் 2ஆவது இடத் திலும் அந்நாட்டில் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் டன் வரை தங்கம் இருப்பு உள்ளது நாட்டில் உள்ள மொத்த 330 பெரிய தங்கச் சுரங்கங்களிலிருந்து தினசரி 11ஆயிரம் டன் தங்கத் தாதுவை சீனா தோண்டி எடுக்கிறது. உற்பத்திக்கு ஏற்றவாறு தங்க நுகர்வும் சீனாவில் அதிக அளவில் உள்ளது. அங்கு சென்ற ஆண்டுமட்டும் 363.3 டன் தங்கம் விற்பனை ஆகியுள்ளது. (அ)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை நோர்வே இல்லாமல் நடத்த முடியாது

## விடுதலைப்புலிகளின் படைத்துறைப்பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எதிர் காலப் பேச்சுவார்த்தை தமிழீழ விடுதலைப் புலி



களுடன் ஏனைய தமிழ் கட்சிகளுடனும் இணைந்தே நடத்தப்படும் என அரசாங்கம் விடுத்துள்ள அறிவித்தலைத் தமிழீழ விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளனர்.

நோர்வே நாட்டின் பிரசன்னமில்லாமல் அரசாங்கத்துடன் மாத்திரம் பேச்சுவார்த்தையை நடத்த முடியாது எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அனைத்துத் தமிழ்த் தரப்புக்களுடன் பேச்சு என்ற அரசாங்கத்தின் தகவலானது பேச்சுவார்த்தையை தாமதப்படுத்துவதற்கான ஒரு உத்தியே என்றும் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து நோர்வேத் தரப்பினரைக் கிளி நொச்சிக்கு அனுப்ப முடியாது என அரசாங்கம் கூறுவது தொடர்பாக கருத்துரைத்துள்ள இளந்திரையன் ஐக்கிய நாடுகள் சபையினர் தினந்தோறும் கிளிநொச்சிக்கு வந்து செல்லும்போது நோர்வேத் தரப்பினருக்குக் கிளிநொச்சியில் பாதுகாப்பில்லை என அரசாங்கம் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாததொன்று என மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# மலேசிய அரச ஊழியர்களுக்கு அலுவலகத்தில் தொழுகை கட்டாயம்

(கோலாலம்பூர்)

அரச அலுவலகங்களில் பணிபுரியும் இஸ்லாமியர்கள் அலுவலகத்தில் கட்டாயம் தொழுகை செய்யவேண்டும் என மலேசியாவில் கெலன்டன் மாநில அரசு ஆணைபிறப்பித்துள்ளது. பிற மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்த முறையை பின்பற்ற தேவையில்லை இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு வரும் இதைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.


ஒரு நாளைக்கு 5 தடவை தொழுகை நடத்துவதும் அவசியம் என்று அந்த அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அலுவலகத்தில் அல்லாவை நினைத்து தொழுகையில் தூய்மை பெறுகிறது. இதனால் அலுவலகங்களில் ஊழல் போன்ற தவறான செயல்களில் ஈடுபட மனம் இடம் கொடுக்காது ஆனால் அல்லாவை தொழுகை செய்யாதவர்கள் அச்சமின்றி ஊழலில் ஈடுபடுவர்

இதைக்கருத்தில் கொண்டுதான் அரசு அலுவலகங்களில் தொழுகையை கட்டாயப்படுத்தியுள்ளதாக கெலன்டன் மாநில அரசு தெரிவித்துள்ளது. (அ)

# ஆயர்களாகப் பெண்கள் பணியாற்ற ஆதரவு

(லண்டன்)

இங்கிலாந்து தேவாலயங்களின் ஆளும் பொது சினொட்டினர் பெண்கள் ஆயர்களாக



திரு நிலைப் படுத்தப்பட்டு சேவையாற்றுவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளது.

சினொட்டினர் பணியாற்றும் 1300 பேர் இதற்கு இணக்கம் தெரிவித்து வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாதுகாப்புச் செயலாளருடன் பொலிஸ் மா அதிபர் சந்திப்பு

(கொழும்பு)

புதிய பொலிஸ் மா அதிபராகப் பதவியேற்றுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜக்ஷவை அவரது அமைச்சில் சந்தித்து பேசியுள்ளார் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையின் 31ஆவது பொலிஸ் மா அதிபராகப் பதவியேற்றுள்ள இவர் கடந்த முதலாம் திகதி தனது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றார்.

1974ஆம் ஆண்டில் உதவி பொலிஸ் அத்தியட்சகராக சேவையில் இணைந்து கொண்ட இவர் பல உயர் பதவிகளையும் பெற்று 1993ஆம் ஆண்டில் பிரதி பொலிஸ் மா அதிபராக உயர்வு பெற்றதோடு பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும் சிறிது காலம் சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரதி சபாநாயகராக பிரியங்கர ஜெயரட்ண

(கொழும்பு)

பாராளுமன்ற புதிய பிரதி சபாநாயகராக ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரியங் கர ஜெயரட்ண நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றம் நேற்று காலை கூடிய போது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதி சபா நாயகர் பதவிக்காக பாராளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜெயரட்ணவின் பெயரை முன்மொழிந்தார்.



கீதாஜனா குணவர்த்தணவின் பதவி விலகியதையடுத்து பிரதி சபாநாயகராக பிரியங்கர ஜெயரட்ண நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஒரு ஆடு வேலியைத் தாண்டினால் – மற்றவை அதனையே தொடரும்!

– ஸ்வெயின்

வலம்புரி

# ஆடலரசன் ஆன்மாக்களை உய்விக்க அருட்காட்சியளித்த ஆனி உத்திரம்

## இன்று ஆனி உத்திரத் திருநாள்

ஆனிமாதத்தில் வரும் உத்திர நட்சத்திரம் சிதம்பர நடராசப் பெருமானின் திருத்தாண்டவ வழிபாட்டுச் சிறப்புமிகு நாளாகும். உலக ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு நடராசப் பெருமான் பஞ்சகிருத்திய திரு நடனம்புரிந்து அடியார்களுக்கு நல்ல திரு அருட்காட்சி புரிகின்றார்.

தில்லையில் நடராசப் பெருமானின் திருநடனத்தை கண்டுவழிபட்ட அப்பர் சுவாமிகள் தம்மனதைப் பறிகொடுத்து மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்தமானிநிலத்தே எனவும் காரைக்கால் அம்மையார் ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க வேண்டும் எனவும் எடுத்துக் கூறியிருப்பது நடராசப்பெருமானின் திரு நடனத்தைக் கண்டு வழிபடுவதன் பக்தித்திறன் எத்துணைச்சிறப்புடைத்து என்பதை உணர்த்துவதாய் உள்ளது.

தில்லைக்கூத்தனாம் நடராசப் பெருமானின் திருநடன வழிபாடு எமது இன்னல்களைப்போக்கி நற்பேறுதர வல்லது என்பது


தில்லையம்பல நடராசா<br>
செழுமைநாதனே பரமேஸ்வரா<br>
எம் அல்லல் தீர்த்தாடவா ! வா!<br>
அசைந்தாடி வா !வா!

என வரும் இனிய பாடல் வரிகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

தில்லை நடராசப் பொருமானின் ஆனந்த தாண்டவத்தை முப்பத்து முக்கோடி தேவர்களும் , நாற்பத் தென்னாயிரம் ஷிகளும் ஆனி உத்திர நன்னாளிலே கண்டு வழிபட்டு ஆனந்தப் பரவசம் கொண்டவர்களால் இப்புனித நாற்காட்சியை இவ்வுலகோர் யாவரும் கண்டு வழிபடுவதன் மூலம் நற்கதியடைய வேண்டினார்கள்.

எனவேதான் சிதம்பரம் போக முடியாதவர்கள் இந்த ஆனி உத்திர நாளிலே தத்தமக்கு அண்மித்துள்ள நடராசப் பெருமான் கோவில் கொண்டிருக்கும் ஆலயங்கள் சென்று வழிபாடுகள் செய்தும், விழாக்கள் நடத்தியும் அமைதி பெறுகின்றார்கள்.தில்லை நடராசப்பெருமானின் அருட் திருக்கோலத்தை திருநாவுக்கரசு நாய னாராகிய அப்பர் சுவாமிகள்

நீர்வைமணி



குனித்த புருவமும் கொவ்வைச்<br>
செவ்வாயிற் குமின் சிரிப்பும்<br>
பனித்த சடையும் பவளம்போல் மேனி<br>
யிற்பால்வெண்ணீறும்<br>
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்<br>
காணப்பெற்றால்<br>
மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த<br>
மானிலத்தே

என வரும் தேவாரப்பதிகத்தில் மிக அழகாக எடுத்துப்பாடியுள்ளார். நாமும் ஆனி உத்தர நன்னாளிலே சிதம்பர நடராசப்பெருமானை வேண்டு தல் செய்து நற்பேறுகள் அடைய முயல்வோமாக.

# நடைபாதை வியாபாரத்தால் சிரமப்படும் நோயாளர்

யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் நடைபாதையில் தெருவோர வியாபாரம் களைகட்டியுள்ளது.

இதைத் தடுத்து நோயாளர்கள் மற்றும் பயணிகள் செல்வதற்கு வசதியாக வேலியிடப்பட்டது. நல்ல காரியம் செய்யப்பட்டுள்ளது எனும் திருப்தி நீடிப்பதற்குத் தடையாக, வேலியிடப்பட்ட நடைபாதையில் வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்கள் பெரும் சிரமப்படுகின்றனர். நடைபாதையில் தெருவோர வியாபாரம் இருப்பதால் சில நோயாளர்கள் தவறி விழுந்த பரிதாபங்களும் நடந்தேறியுள்ளன.

ஒரு சிலர் பொருள்களைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்திலும் கூட அந்தப் பாதையால் எவரும் நடந்து செல்ல முடியாதுள்ளது. இந் நிலையில் கர்ப்பிணித் தாய்மார் நடந்து செல்வது பேராபத்தை விளைவிக்கக் கூடியதாகும்.

எனினும் இது விடயத்தில் உரியவர்கள் கண்டும் காணாதிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். நடைபாதை வியாபாரிகளைத் தடுப்பதற்காக வேலியிடப்பட்டால் அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆனால் எதற்காக வேலியிடப்பட்டதோ அதற்கு மாறாக வேலியிடப்பட்ட பகுதிக்குள்ளேயே வியாபாரம் நடப்பதென்பது பொதுமக்களை முட்டாள்தனமாக்கும் செயலாகும்.

இருபத்தோராம் நூற்றாண்டில் மனித நேயத்தைப் புரிந்து கொள்ளாத மானிடம் இருப்பது இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளில்தானா? என்ற கேள்வி நெஞ்சைத் துளைக்கின்றது.

அதேவேளை உள்ளூராட்சி சபைகள், யாழ்.பொலிஸ் நிலையம் இவற்றுக்கு மேலாக இராணுவத்தினரின் ரோந்துகள் என எல்லாவற்றின் பார்வையும் இருக்கும்போது யாழ். போதனா வைத்தியசாலையின் தெருவோரத்தில் வியாபாரம் நடைபெறுவது எப்படி? என்ற கேள்வி பொதுமக்களிடம் எழுவது நியாயமானதே.

எதுவாயினும், நோயாளர்கள் மற்றும் பயணிகளுக்கு இடையூறு இல்லாதவாறு தெருவோர வியாபாரம் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும் என்பதுடன், குறித்த தெருவோர வியாபாரிகளின் தொழில் – சீவனோபாயம் பாதிக்கப்படாதவாறு, அவர்களுக்கென பொருத்தமான இடம் ஒதுக்கப்படுவதும் கட்டாயமானதாகும்.

அதேநேரம் புதிய புதிய வியாபாரிகள் அந்த இடத்தை ஆக்கிரமிக்காமல் இருப்பதையும் உறுதி செய்வது அவசியமாகும்.

# ஊடகவியலாளர்கள் பணியாற்றுவதற்கு ஆபத்தான நாடுகளில் மூன்றாம் இடத்தில் இலங்கை

(கொழும்பு)

உலகத்திலேயே ஊடகவியலாளர்கள் பணியாற்றுவதற்கு மிகவும் மோசமான நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்தில் இருப்பதாக உலக பத்திரிகைகளின் அமைப்பு தெரிவித் துள்ளது. ஊடகவியலாளர்களுக்கு மிகவும் மோசமான நாடு ஈராக் எனவும் அதற்கு அடுத்த மோசமான நாடு சோமாலியா எனவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து அரசாங்கம் உரிய விசாரணைகளை மேற்கொள்வதில்லையென ஊடக அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன இந்த வருடத்தில் மாத்திரம் இதுவரை 12 ஊடக வியலாளர்கள் தாக்கப்பட்டிருப்பதுடன் ஒருவர் வெட்டிக்கொல்லப்பட்டிருப்பதாக ஊடக அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

ஊடக சுதந்திரத்துக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்கள் பற்றி அரசாங்கம் உரிய விசாரணைகளை நடத்தும் என்ற நம்பிக்கை அற்றுப்போயிருப்பதாக உள்ளூர் ஊடக அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கை என்னவென ரொய்டர் செய்திச் சேவை வினவியபோது விசாரணைகள் நடத்தப்படுகின்றன. இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸ் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர பதிலளித்திருந்தார்.

இந்த நிலையிலேயே ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகத் தமது பணிகளை முன்னெடுப்பதற்கு இலங்கை மிகவும் மோசமான நாடுகளில் மூன்றாவது இடத்தில் அமைந்திருப்பதாக உலக பத்திரிகைகளின் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் தாக்கப்படுகின்றமையை கடந்த ஜுலை 1ஆம் திகதி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் கண்டித்திருந்தது. அத்துடன் இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டுமெனக் கோரிய 30 ஊடக அமைப்புக்கள் இணைந்து கையொப்பமிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீ மூனுக்குக் கடிதமொன்றை அனுப்பியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

# கைதிகளைப் பரிமாறிக்கொள்ள இலங்கை-இந்தியா ஒப்பந்தம்

## "ஹிந்து" தகவல்

(கொழும்பு)

இலங்கையும் இந்தியாவும் கைதிகளைப் பரிமாறிக்கொள்வது தொடர்பாக ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கைதிகளைப் பரிமாறிக் கொள்வதற்கு செய்துகொள்ளப்பட்ட இரு தரப்பு ஒபந்தத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களே இலங்கையுடனான ஒப்பந்தத்திலும் உள்ளடக்கப்படவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தை இறுதிப்படுத்தப்படும் கடைசிக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் இறுதிப்படுத்தியதும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமெனவும் தூதரக வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இரு தரப்பு ஒப்பந்தத்துக்கு அமைய இலங்கையின் சிறைச் சாலைகளிலுள்ள 43 இந்தியர்கள் நன்மை அடைவார்கள் என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டவர்கள் எனவும் கூறப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்படவிருக்கும் கைதிகள் பரிமாற்றம் தொடர்பான ஒப்பந்ததின் மூலம் கடல் எல்லைகளுக்குள் அத்துமீறி நுழைந்தமை தொடர்பாக கைது செய்யப்பட்டிருக்கும் மீனவர்களும் விடுவிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

இதேவேளை இலங்கைக் கடற் படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகத்தின் இராமநாதபுர மீனவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

கடந்த வார மும் அவர்கள் இவ்வாறானதொரு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

ஓலைச் சுவடிகள் 58

தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

## மஞ்சள் இல்லாமல் சமையல் செய்யலாமா?

மஞ்சள் சேர்க்காமல் சமையல் செய்தால் அது சுவையற்றிருக்கும். பார்க்கவும் அழகிருக்காது பல தாய்மார்களும் இதனாலேயே சமையலில் மஞ்சள் சேர்க்கின்றனர்.

ஆனால் மஞ்சலில் உள்ள குணங்கள் இவையல்ல. மஞ்சள் காய்ச்சிக் குடித்தால் மனித உடலுக்கு ஜீவ சக்தி கிடைக்கும் என்று ஆயுர்வேதம் கூறுகின்றது.

மஞ்சள் கலந்த உணவு வகைகள் உட்கொள்ளும்போது இரத்த அசுத்தத்தால் உண்டாகும் சரும நோய்கள்,சிறு நீர் சம்பந்தமான குடல் கிருமிகள் முதலி யவையின் பாதிப்பிலிருந்து விலகலாம்.

மேலும் உணவு வாயிலாகவோ, வேறு வழியிலோ உடலில் புகுந்த விஷ அம்சங்களை அழிப்பதற்கும் மஞ்சள் உதவுகின்றது.

வயிற்றுக்கோளாறு, வாயுக்கோளாறு என்பவையை தணிக்கின்றது. மஞ்சள் சருமத்திற்கு மென்மையும் அளித்து நோய் அணுக்களை அழித்து அழகையும் அதிகரிக்கிறது.

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# கஞ்சா வைத்திருந்தவருக்கு 9 மாத சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பில் அண்மையில் முதியோர் ஒருவரைக் கொலை செய்து நகைகள் திருடிய சம்பவத்தில் தொடர்புடையவர் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவர் வீட்டிலிருந்து கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன் வீடு உடைப்பதற்குப் பயன்படுத்தும் கருவிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. இளவாலைப் பொலிஸாரால் குறித்த சந்தேக நபரின் வீட்டைச் சோதனை செய்தபோதே கஞ்சா மற்றும் வீடு உடைக்கும் கருவிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி சந்தேக நபரை நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நீதிபதி திருமதி சறோஜினிதேவி இளங்கோவன் முன்னிலையில் இளவாலைப் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

இவ் வழக்கை விசாரணை செய்த நீதிபதி, கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டிற்காக 9 மாதச் சிறைத் தண்டனையும் வீடு உடைக்கும் கருவிகள் வைத்திருந்தமைக்காக 6 மாதச் சிறைத் தண்டனையுமாக மொத்தம் 15 மாத சிறைத்தண்டனைவிதித்துத்தீர்ப்பளித்தார். (ச-5)

# செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியுடன் இராணுவத் தளபதி சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் குழுவின் பிரதித் தலைவர் அந்தோனி டால்சியல், இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை நேற்று முன்தினம் சந்தித்து வன்னியில் இராணுவத்தினரும் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் இணைந்து பணியாற்றுவது குறித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஓமந்தையிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் தற்காலிகமாக வெளியேறியதற்கான காரணங்களை இராணுவத் தளபதியிடம் சுட்டிக்காட்டியிருக்கும் டால்சியல்,

தமது நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கும் சுதந்திரமாகப் பணி புரிவதற்குமான இராணுவத்தினரின் ஒத்துழைப்பின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

இதற்குப் பதிலளித்திருக்கும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான ஆகக் கூடுதல் ஒத்துழைப்பு இராணுவத் தரப்பிலிருந்து கிடைக்கும் எனவும் பாதுகாப்புப் படையினரின் சகல பிரிவினரும் குறிப்பாக விமானப் படையினரும் வன்னியிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் நிலைகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரதும் பாதுகாப்புப் படையினரதும் நற்பெயருக்குக் கலங்கம் ஏற்படுத்தும் வகையில் விடுதலைப்புலிகள் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பான கட்டுக்கதைகளை வெளியிட்டு வருவதாகவும் இராணுவத் தளபதி சர்வதேச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் குழுவின் பிரதித் தலைவரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமார் அரை மணி நேரம் இடம்பெற்ற இச் சந்திப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் பணிகளுக்குத் தேவையான பாதுகாப்பு உத்தரவாதம் இராணுவத் தளபதியால் வழங்கப்பட்டிருக்கின்ற அதேநேரம் கள நிலைமைகள் தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## சுத்திகரிப்புத் தொழிலாளர் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர் (ஆண்கள்) ஆட்சேர்ப்பு விண்ணப்பதாரிகளுக்கான செயன்முறை நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் பண்ணையிலுள்ள சுகாதாரக் கிராமத்தில் காலை 8 மணிக்கு நடைபெறும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்களை வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிட முடியும். (ச)

## யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின்

# சாரதி உட்பட நால்வருக்கு தொடர்ந்தும் விளக்க மறியல்

(யாழ்ப் பாணம்)

யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் வாகனத்திலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சாரதி உட்பட நால்வரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் மானிப்பாய்ப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாயிலுள்ள கராஜ் ஒன்றில் திருத்த வேலைக்காக விடப்பட்டிருந்த யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவின் வாகனத்திலிருந்து கடந்த 28 ஆம் திகதி ஆயுதங்கள் சில மீட்டதாகக் குறிப்பிட்டு சந்தேகத்தின் பேரில் மானிப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அவ் வாகனத்தின் சாரதி மற்றும் கராஜ் ஊழியர்கள் மூவரையும் இம் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிமன்ற நீதிவான் திருமதி சறோஜினி தேவி இளங்கோவன் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந் நிலையில் மீண்டும் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நால்வரையும் ஆஜர் செய்த மானிப்பாய்ப் பொலிஸார் கேட்டுக் கொண்டதற்கிணங்க எதிர்வரும் 22 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் சறோஜினிதேவி இளங்கோவன் உத்தரவிட்டார். (ச-5)

# ராஜீவ் கொலைக் கைதிகள் இருவர் விடுவிக்கக் கோரி மனு

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் மேலும் இரண்டு இலங்கையர்கள் தம்மை விடுவிக்குமாறு கோரி மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகியோரே இந்த மனுவைச் சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்களது மனுக்களுக்குப் பதில் மனுத் தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு அழைப்பாணை அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகியோர் தமது மனுவில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுத் தாம் இருவரும் வேலூர் மத்திய சிறைச்சாலையில் கடந்த 14 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனை அனுபவித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு தம்மை விடுதலை செய்யுமாறு தமிழக அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று இவர்கள் மனுவில் கோரியுள்ளனர். (ச-5)

## வடக்கே தொடரும் யுத்தத்...

யிலும் தஞ்சமடைந்துள்ளதாகக் கிளிநொச்சி செயலக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் வீதியோரத்தில் மரங்களின் கீழும் பொது இடங்களிலும் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதற்கும் இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதற்கிடையில் மூடப்பட்டிருந்த ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியூடான வன்னிப் பிரதேசத்திற்கான போக்குவரத்து நேற்று வழமைக்குத் திரும்பியதையடுத்து ஒரு வார காலமாகத் தடைப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்கான அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

11 ட்ரக் வண்டிகளில் உணவுப் பொருள்களும் 2 வண்டிகளில் எரிபொருளும் வவுனியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். பொது மக்கள் போக்குவரத்து நேற்று இடம்பெற்றிருந்தது. (ச-5)

## கடந்த...

நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிற்க வேண்டும்.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஜனாதிபதி தீவிரமாக இறங்கியிருக்கும் நிலையில், அவரது கரங்களை நாம் பலப்படுத்த வேண்டும். படையினரின் தாக்குதல்களால் புலிகள் இன்று பின்வாங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் எவரும் தேசத்திற்குத் துரோகமான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. கடந்த ஒரு மாதத்தில் இடம்பெற்ற மோதல்களில் 112 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 793 படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் 43 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 61 பொது மக்கள் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். (ச-5)

## 31 குண்டு...

றில் ஒன்று பிள்ளையானுக்கு வழங்கப்பட்டதா? இல்லையா? என்பது குறித்து தற்போது எதனையும் கூற முடியாது.

தற்போதைய நாடாளுமன்றம் கூடிய பின்னர் இதுவரை 31 குண்டு துளைக்காத வாகனங்களை அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளது. பிள்ளையானுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

எனவே அவருக்குரிய பாதுகாப்பை அரசாங்கம் வழங்கும். பிள்ளையானுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதால் அவர் பயன்படுத்துவது குண்டு துளைக்காத வாகனமா? இல்லையா? என்பது குறித்த தகவல்களை அரசாங்கம் வழங்காது என்றார் அவர். (ச-5)

## கடத்தல்களைக் கட்டுப்...

உரையாற்றுகையில்,

புலிகளைத் தோற்கடிக்க ஒன்றிணையுமாறு விடுக்கப்படும் அழைப்பை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் எமது ஆதரவையும் சட்டத்தையும் அரசாங்கம் தவறாகப் பயன்படுத்துகின்றது.

குறிப்பாக ஊடகவியலாளர்கள் மீதான அடக்கு முறையை இந்த அரசாங்கம் அதிகப்படுத்தியிருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளரான முன்னாள் இராணுவ அதிகாரியான ஜானக பெரேராவுக்கு அரசாங்கம் பாதுகாப்பை வழங்க மறுத்துள்ளது.

ஆனால் அரசாங்கத்தின் சார்பில் நிறுத்தப்பட்டுள்ள முதலமைச்சர் வேட்பாளருக்கு 30 படையினர் பாதுகாப்பு வழங்குகின்றனர். யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற தாக்குதல்களில் முக்கிய பங்காற்றியவர் ஜானக பெரேரா. அவருக்குத் தற்போதும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றது.

புலிகளின் தலைவர் பிரபாகரனை முதன்மைப்படுத்தியே அரசாங்கம் ஆட்சியை நடத்துகின்றது. போரை முடிவுக்குக் கொண்டு வர இன்னும் ஒரு வருடம் தேவை என்கின்றார் சரத் பொன்சேகா.

மன்னாரில் பல இடங்களை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. 1994, 95களில் நடந்ததைப் படையினர் மறந்து விட்டனரா?

மன்னாரில் படையினர் இடங்களைக் கைப்பற்றியுள்ளனரா? அல்லது புலிகள் கைப்பற்ற விடுகின்றனரா? பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கும் தகவல்களைப் பார்த்தால் புலிகளின் தலைவர் ஓடியிருக்க வேண்டும்.

ஆனால் அப்படி நடக்கவில்லையே? மன்னாரில் புலிகளின் தளபதிகள் கொல்லப்படுவதாகக் கூறுகின்றனர். அப்படியானால் மன்னாரில் புலிகளின் மேஜர்களும் கப்டன்களும் குட்டி போடுகின்றனரா?

மன்னாரில் புலிகள் பெருமளவில் கொல்லப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு கூறுகின்றது. ஆனால் அதில் எந்தளவு உண்மையுள்ளது என தெரியவில்லை.

இந்திய உயர் மட்டக் குழுவினர் ஏன் இங்கு வருகை தந்தனர் என்று எதற்காக அரசாங்கம் அறிவிக்காமல் மௌனம் காக்கின்றது?

சட்ட விரோதமாக நாட்டை விட்டு வெளியேறிய கருணா தற்போது மீண்டும் நாட்டுக்குள் வந்திருக்கின்றார். அவர் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்?

வெள்ளை வான் கடத்தல்களைத் தனக்குத் தெரியாது என்று பொலிஸ் மாஅதிபர் பொறுப்பற்ற வகையில் கருத்துத் தெரிவித்து வருகின்றார் என்றார். (ச-5)

## ஒற்றையாட்சியை ஏற்றுக்...

படையினர் பெற்று வரும் வெற்றிகள் குறித்து ரணில் விக்கிரமசிங்க வெளிநாடுகளில் விமர்சித்து வருகின்றார். படையினரால் போரில் வெற்றி பெற்று விட முடியாது என்பது அவரின் கணிப்பாகவுள்ளது.

எனவே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என அழுத்தம் கொடுக்கும்படி வெளிநாடுகளை அவர் வலியுறுத்தி வருகின்றார். ஆனால் விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் படையினர் தொடர்ந்தும் வெற்றி பெற்று வருகின்றனர்.

வன்னியை முழுமையாகக் கைப்பற்றும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. புலிகளுடன் பேச்சு நடத்த இந்த அரசாங்கம் இப்போதும் தயாராகவேயுள்ளது. ஆனால் அதற்கு முன்னர் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும்.

அவர்களின் ஆயுதங்கள் களையப்படாமல் பேச்சு இனிமேல் இடம்பெறாது. அதே நேரம் ஒற்றை ஆட்சியை ஏற்றுக் கொண்டு பேச்சுக்கு வருவதாகப் புலிகள் ஒப்புக் கொள்ள வேண்டும்.

இந் நிலையில் தமது கட்சிக்குள் ஏற்பட்டுள்ள வேற்றுமையை மூடி மறைப்பதற்காக எதிர்க்கட்சி அரசாங்கத்திற்கு எதிராக வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளது. இது நாட்டையும் நாட்டு மக்களையும் குழப்பும் செயல்.

இத்தகைய செயல்களுக்கு நாட்டு மக்கள் இடமளிக்கக் கூடாது. எதிர்க்கட்சிகள் நாட்டைக் குழப்பத்தில் ஈடுபடுத்துவதில் முனைப்புடன் ஈடுபட்டிருக்க எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்துடன் இணைவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

போருக்கு எதிரான கருத்தை மாகாண சபை வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ அதிகாரியான ஜானக பெரேராவால் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து ஒரு நிகழ்வில் வெளியிட முடியுமா? அவரால் அது முடியாது என்றார் அவர். (ச-5)

## தேர்தல்...

விடயங்கள் தொடர்பாகத் தேர்தல் ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரம் தகவல் வெளியிட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களுக்கான பிரசார நடவடிக்கைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கேகாலையில் ஆரம்பமாகவுள்ளது எனக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ச-5)


**2008 A/L வரலாறு மாபெரும் கருத்தரங்கு**

2008 க.பொ.த. உயர்தரத்தில் வரலாறு பாடத்தில் தோற்றுபவர்களுக்கான பயனுள்ள கருத்தரங்கு யாழின் முன்னணி வரலாற்று பட்டதாரி ஆசிரியர்களான

M.சத்தியன் S.சுஜிகரன்
M.பத்மன் S.S.தாசன்

ஆகியோரின் ஒன்றிணைந்த சேவை

காலம் :- 10.07.2008 வியாழன் மற்றும் 11.07.2008 வெள்ளி

நேரம் :- காலை 8.00 – பி.ப. 4.00 மணி வரை

இடம் :- DMI, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

தகவல் :- ஒழுங்கமைப்புக் குழு 444


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.